ஆ. சபாரத்தினம்

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

# நினைவுப் பேருரை – 08



Ambassador of Tamil Rev. Xavier Thaninayagam

# MEMORIAL LECTURE - 08

## "இஸ்பானிய - தமிழ் அனுபூதி நெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"


**திரு. ஆ. சபாரத்தினம்**
B.A. (Ceylon), M. A. (Jaffna)
(இளைப்பாறிய அதிபர், பத்திரிகையாளர்)


## Spanish Tamil Mystical Trends: A Comparative Study of St. Theresa of Avila and Kāraik Kāl Ammaiyār


**Mr. M. Sabaratnam**
B.A. (Ceylon), M. A. (Jaffna)
(Retired Principal & Journalist)



**06. 06. 2006**

தனிநாயகம் தமிழ்மன்றம்
புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

Thaninayagam Tamil Academy
St. Francis Xavier's Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

# AMBASSADOR OF TAMIL

# REV. FR. XAVIER S. THANINAYAGAM

# MEMORIAL LECTURE - 08

**Mr. M. Sabaratnam**

B.A. (Ceylon), M. A. (Jaffna)

(Retired Teacher, Principal & Journalist)

## "இஸ்பானிய - தமிழ் அனுபூதி நெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"

Spanish – Tamil Mystical Trends: A Comparative Study of St. Theresa of Avila and Kāraik Kāl Ammaiyār

**06.06.2006**

# நுழைவாயில்

## அதிபரிடமிருந்து...

மீண்டுமொருமுறை போர் மேகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கும்போது, வகை தொகையின்றி வர்க்க, பால் வேறுபாடின்றி மக்கள் கொல்லப்படுகின்ற வேளையில், அச்சுறுத்தல், ஆட்கடத்தல், பல்வேறு விதமான தடைச்சட்டங்கள், திடீர் திடீரென நடைமுறைப்படுத்தப்படும் பின்னணியில் இந்த நினைவுப் பேருரை ஆற்றப்படுகின்றது.

ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவு பெற்ற நிலையிலே இக்குருமடம் கடந்த காலங்களிலும் பல்வேறு தடைகள், இடம்பெயர்வுகளுடாக குறையின்றி இயங்கி வந்தமை மட்டுமல்ல, அதே தடைகள் குருமாணவர்களின் பயிற்சிக்கு புதிய பரிமாணங்களைக் கொடுத்து மக்களுடைய தேவைகளை அனுபவ ரீதியாகப் புரிந்துகொண்டு பணியாற்றக்கூடிய சூழமைவை ஏற்படுத்திக் கொடுத்தன.

இக்குருமடத்தை தமிழரின் பண்பாட்டு மையமாகிய யாழ். மண்ணில் உருவாக்கிய எமது பெருமதிப்பிற்குரிய மறைந்த முன்னாள் ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை அவர்களுக்குத் தூண்டுதலாக இருந்த பல காரணிகளுள் முக்கியமானது 2ம் வத்திக்கான் கொடுத்த வழிகாட்டுதலாகும். குறிப்பாக திருச்சபையின் நற்செய்திப்பணி (Ad Gentes Divinitus) என்ற தீர்மானத் தொகுப்பில் உள்ள ஒரு பகுதியை ஈண்டு குறிப்பிடலாம். '... மெய்யியல், இறையியல் பாடங்களில் அவர்கள் தங்கள் நாட்டு மரபுகள், சமயங்கள் ஆகியவற்றிலிருந்தும், கிறிஸ்தவ சமயங்களிலிருந்தும் அவற்றிற்கான உறவுகளை ஊன்றி அறிந்திடவேண்டும்'.

இந்தப் பின்னிணியில் திரு. ஆ. சபாரத்தினம் அவர்களின் 'இஸ்பானிய – தமிழ் அனுபூதி நெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு' என்ற தலைப்பிலான நினைவுப் பேருரை எமது குருமடம் இந்த மண்ணில் நிறுவப்பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஒரு குறிப்பிடத்தக்க, பாராட்டத்தக்க முன்நகர்வு ஆகும். இப்பயனுள்ள பணிக்காக திரு. ஆ. சபாரத்தினத்தையும் அவரை ஏற்பாடு செய்த தனிநாயகம் தமிழ் மன்றத்தாரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். இந்நினைவுப் பேருரையை செவிமடுப்போரும், வாசிப்போரும் நிறைவாக பயனைப் பெற்று, பெற்ற பயனைப் பிறரோடு பகிர வாழ்த்துகின்றேன்.

**அருள்திரு ச. வி. ப. மங்களராசா**<br>**அதிபர்,**<br>**புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி,**<br>**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

## தலைவரிடமிருந்து...

உலக சரித்திர வட்டத்தின் மையமாக ஒருகாலத்தில் இருந்த தமிழும், தமிழினமும், அடக்குமுறைகளும், புலப்பெயர்வும் கூடிக்காதலித்து இன்று வரலாற்று வட்டத்தின் விளிம்புக்கு வீசப்பட்டு விட்டது. தமிழ் உள்ளூர் மனிதன் முதல் உலக மானிடம் வரையும் உரக்கச் சிந்தித்து "புகழெனில் உயிரும் கொடுக்குவர். பழியெனில் உலகோடு வரினும் கொள்ளார்" என்றும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றும், "என்னை நன்றே இறைவன் செய்தான் தன்னை நன்றே தமிழ் செய்ய" என்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் தாரகமந்திரமும் ஒட்டுமொத்தமான மனிதகுலத்திற்கு உலகக்கவிதை எழுதியது நம் தமிழ்.

இன்று தமிழர் என்ற இனத்துவ அடையாளத்தால் மரண நெருப்புக்கூடாக பெற்றோலியல் பயணம் செய்கின்றோம். சுனாமி தந்த ஆறாவழுக்கள் மாறுமுன்னே, தமிழர் தாயக அமைதிப் பூக்களில் பூகம்பம் வெடித்துவிட்டது. சுட்டுக்கொலை, கிளைமோர் தாக்குதல், கைக்குண்டு வீச்சு போன்ற பதங்களே பத்திரிகைகளில் நிரந்தர இருப்பு கொண்டன. குருதியால் குளிப்பதுதான் தமிழரின் விதியா? உலகமே! இதற்கு மௌனம்தான் பதிலா? என்ற கோஷம் புலம்பெயர் தமிழரால் ஓங்கி ஒலிக்கப்பட்டும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அது செவிடன் காதில் ஊதிய சங்காய் போய்விட்டது.

இந்த பின்புலத்தில் மண்வாசனை கலந்த குருத்துவ உருவாக்கத்தின் இளவல்களாகி நம் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் எட்டாவது நினைவுப் பேருரையை நடத்துகின்றோம். ஈழத்து இறையியல் ஆக்கத்தின் எதிர்கால நம்பிக்கையின் நாடித்துடிப்புக்கள் நாம்தான். மொழி வளர்த்து மறைவளர்க்க நாம் தமிழை நேசிப்போம் - வாசிப்போம் - யோசிப்போம். வாழ்விலும், வழிபாட்டிலும் தமிழை போசிப்போம். நம்மைக் காணும் அனைவரும் நம் தமிழில் இறைவனைக் காணட்டும். 'ஸ்பானிய – தமிழ் அனுபூதி நெறிப்போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு' பற்றிய பேருரையை நிகழ்த்த வரும் எம் ஆசான் அறிவாலயம் திரு. ஆ. சபாரத்தினம் அவர்களை நன்றியோடு வாழ்த்தி நிற்கின்றேன். இப்பேருரை இயேசுவின் பணிக்கு ஆழமான அர்த்தம் கொடுக்க நமக்குதவும் என்பது வெளிப்படையான இரகசியம். இன்றுவரை ஆயுதங்களால், அந்நிய கலாச்சாரத்தின்பால், பிறமொழி உறவுகளின் பிணிப்பால் தமிழ் தன்னிறம் திரிதலில்லை. அந்நிறத்தின் தொடர்ச்சியாய் நமது பார்வையும், பதிவும், பயணமும் அமையட்டும்.

"தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்"

**அருட்சகோ. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்**
**தலைவர்,**
**தனிநாயகம் தமிழ் மன்றம்.**

## இயக்குனரிடமிருந்து...

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை 25 ஆண்டுகளுக்கு முன்பு எமது முன்னாள் ஆயரும், இக்குருமடத்தின் நிறுவுனருமான பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆரம்பித்தபோது அவரது மனத்தில் இருந்த ஒரே நோக்கம் "மண்வாசனையுள்ள உருவாக்கம்" என்பதாகும். எமக்கேயுரித்தான பண்பாட்டு வேர்களை இனங்கண்டு அவற்றின்மேல் ஈடுபாட்டை வளர்க்க வேண்டும் என்ற கனவோடு இக்குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இக்கல்லூரியில் இயங்கும் தனிநாயகம் தமிழ் மன்றம் மேற்கூறப்பட்ட கனவை நனவாக்குவதற்கு தனது பரந்துபட்ட செயற்பாடுகள் மூலமாக காத்திரமாக பங்களிப்பு செய்து வருகிறது. அதனது பரந்துபட்ட செயற்பரப்பின் ஓர் அங்கமாக அமைவதுவே "நினைவுப் பேருரை" தொடராகும்.

நிச்சயமற்ற சூழ்நிலை முன்னெப்போதும் இல்லாதவாறு எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழமைவிலும் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் நினைவுப் பேருரைத் தொடரின் எட்டாவது குழந்தை பிரசவிக்கப்படுகின்றது. இம்முறை எமது பண்பாட்டு தளத்தையும், மேற்குலக பண்பாட்டு தளத்தையும் ஆழ்ந்த இறையுணர்வு நிலையிலே ஒப்பிட்டு நோக்கும் பாரிய பரிசோதனையை நிகழ்த்தியிருக்கின்றார் இத்துறையிலே ஒப்பாரும் மிக்காருமில்லாத ஆசான் திரு. ஆ. சபாரத்தினம் அவர்கள்.

மிகுந்த அர்ப்பணிப்போடும், ஆர்வத்தோடும் இந்நினைவுப் பேருரையை நிகழ்த்தும் எம் அன்புக்குரிய ஆசானுக்கு எம் நன்றிகள்!

இந்நினைவுப் பேருரையின் பின்னணியில் பலரது கடின உழைப்பு உள்ளது. எல்லோருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும்.

"தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்"

**அருள்திரு. போல் றொகான்**
**இயக்குனர் - தனிநாயகம் தமிழ்மன்றம்,**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

# "ஸ்பானிய – தமிழ் அனுபூதிநெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"

# Spanish – Tamil Mystical Trends: A Comparative Study of St. Theresa of Avila and Kāraik Kāl Ammaiyār

## அநுபூதி – வரைவிலக்கணம்

அநுபூதி நெறி என்னும் தொடர் ஆங்கிலத்தில் "Mysticism" என்ற சொல்லுக்கு சமானமாக இலங்கைத்தமிழில் பயன்படுத்தப்படுகிறது. சென்னை ஆங்கில – தமிழ் அகராதி இவ்வாங்கிலச் சொல்லுக்கு இறைநிலை இணைவுப்பான்மை, இறைமை இயைவுப் பண்பு என்ற இரு தொடர்களைப் பொருளாகத் தருகிறது. அதே அகராதி Mystic என்னும் பெயர்ச்சொல்லுக்கு அறிவர், மறைஞானி, அறிவுகடந்த மெய்யுணர்வாளர், இறை உணர்வாளர், தன்நிலை இழந்தவர், இறைநிலை கலந்தவர் என்று விரிவான பொருள்களைத் தருகிறது. Mystic என்ற சொல்லின்மூலம் இலத்தீனில் Mysticus, கிரேக்கத்தில் Mysticos, வடமொழியில் √மூ = கட்டு, மூடு என்பர், சொற்பிறப்பு ஆய்வாளர்.

அநுபூதி என்னும் வடசொல் காட்சி (Perception) விளக்கம் (Apprehension) என்ற பொருளைத்தரும். அநுபவம் என்ற சொல் இவற்றுடன் உணர்வு (Feeling) என்ற கருத்தையும் உடையது. சுவாநுபவம், சுவாநுபூதி என்ற சொற்களே தத்துவசாஸ்திர (மெய்யியல்) நூல்களில் ஆன்மா தானாக உள்ளே உணர்வது என்ற ஆழ்ந்த பொருளில் வருகின்றன. சிவாநுபவம் என்ற சொல்லும் இறுதி உணர்வு பற்றிய விளக்கத்தில் வருகிறது. (உதாரணம் சிவஞானசித்தியார் 310,319) இக்குறிப்பை வைத்துக்கொண்டு அநுபூதி நெறிக்கு வரைவிலக்கணம் வகுக்கலாம். *அநுபூதி என்பது இடையீடின்றி அருகிலுள்ள, நேரடியான, உள்ளுணர்வு சார்ந்த, இறைபற்றிய, அல்லது அனைத்துக்கும் மூலதத்துவம் பற்றிய அறிவு; இது ஒவ்வொருவரின் தனிப்பட்ட சமய அநுபவமாகும்.*

அநுபூதி நெறியில் பெறப்படும் பட்டறிவின் வடிவம், செறிவு என்பவற்றில் மிக விஸ்தாரமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வகையான பட்டறிவின் நம்பகத்தன்மை (Authenticity) அதன் வடிவத்தில் அன்று; அந்த நேரறிவைத் தொடர்ந்து தோன்றும் வாழ்வின் பண்புத்தரத் (Quality of Life) தைக் கொண்டே நிர்ணயிக்கப்படும். அநுபூதி நெறியில் சென்றவருடைய வாழ்வில் உயிர்த்துடிப்பு, புத்துணர்ச்சி, ஆக்கத்திறன், சாந்திநிலை, பெருமகிழ்ச்சி அல்லது பேரின்பம் மிளிரும். ஏனெனில் அவரது வாழ்வு இறைவனுடன் இணைந்து விடுவதால் அகமயமான அமசங்களும் புறமயமானவையும் ஒத்திசைவு பெற்று நிலைபெறும்.

இதனை ஒரு எளிமையான கதைமூலம் விளங்கிக் கொள்வோம். சத்தியகாமன் என்றொரு பிள்ளை குருகுலத்தில் படிக்க விரும்பினான். கௌதமரிடம் சென்று வணங்கித் தன் விருப்பத்தைக் கூறினான். "உனது கோத்திரம் என்ன?" என்று விசாரித்தார் குரு. "நான் தாயின் வயிற்றில் இருக்கும்போது தந்தை இறந்தார். தாய் தன் பெயரைச் சொல்லும்படியும் தந்தையின் கோத்திரம் தெரியாது என்றும்

கூறினாள்” என்றான் இளைஞன். குரு “உண்மையை இப்படி தெளிவாகக் கூறிய நீ பிராமணனே” என்று அவனை மாணவனாக ஏற்றுக்கொண்டார். உபநயனம் செய்வித்தார். உபநயனம் என்பதற்கு மற்றொரு கண்ணைக் கொடுப்பது என்பது பொருள் (initiation) இரண்டு கண்கள் எல்லோருக்கும் உண்டு. மூன்றாவது கண் திறக்க வேண்டும். அது தவக்கண். புலன்களை அடக்கி உட்கண் திறக்க அரும்பாடுபட வேண்டும். குரு சத்தியகாமனிடம் பலம் குன்றிய நானூறு பசுக்களைக் கொடுத்து “இவற்றைப் பராமரித்து வா” என்றார். அவன் ஆயிரமாகுமட்டும் மேய்த்து பின் குருகுலத்திற்கு மீண்டான். குரு கேட்டார் “சத்தியகாமா! பிரமத்தை அறிந்தவன் போல உன்முகம் பிரகாசிக்கிறதே! யார் உபதேசித்தார்?” நடந்தது இதுதான். குருவின் சொல்லை முழுமையாக நிறைவேற்றியதால் மனம் பக்குவம் அடைந்தது. வானும், மண்ணும், ஒளியும், வெளியும், மலையும், நதியும் ஒவ்வொன்றும் உபகுருவாய் நின்று பேசாமல் பேசி ஞானத்தைப் புகட்டின. இதனை அவிலா புனித திரேசா குறிப்பிடுகிறார். “இப்பேரின்பம் இனிமையுடையதாய் இருக்கும்” இது பற்றிப் பின்னர் விரிவாக, ஆழமாக ஆராய்வோம்.

இக்காலத்தில் அநுபூதிநெறி, அனுபூதிமான் என்ற சொற்கள் சிலரால் தம்மைத்தாமே விஞ்ஞான ரீதியான சிந்தனையாளர் என்றும் முற்போக்குவாதிகள் என்றும் காட்டிக் கொள்ளும் சிலரால் - ஏளனத்துக்குரிய சொல்லாக உபயோகப்படுத்தப்படுகின்றன. சில ஏமாற்றுக்காரர்கள் அறிவுகுறைந்த மக்களை நம்பவைத்து தம்மையும் பிறரையும் ஏமாற்றுவது உண்மைதான். அப்படியானால் உண்மையான அநுபூதிநெறி என அடையாளம் பண்ணக்கூடிய இலட்சணங்கள் என்ன? நினைத்த காரியம் சொல்பவர், உருப்பற்றுதல், கலை ஆடுதல், மைபோட்டுப் பார்த்தல் என்ற சில செயற்பாடுகளை வைத்துக்கொண்டு தாம் கடவுளின் பிரதிநிதிகள் என்றும், தாம் கடவுள்தான் என்றும் பறைசாற்றுவோரை எப்படி இனங்காணுவது? இவர்கள் போன்றவர்களைப் போலத்தான் புனிதர்களும் அக்காலத்தில் இருந்தார்களோ என்றும் பாமர மக்கள் வெறுப்புடன் பேசுவதைக் காண்கின்றோம்.

உண்மையான அநுபூதி அல்லது சுவானுபவத்தை இனங் காணப் பின்வரும் நான்கு இலட்சணங்களைக் கல்விசார் அறிஞர்கள் (Intellectuals) வகுத்துள்ளார்கள். (உவில்லியம் ஜேம்ஸ் (1842-1910)

1. வார்த்தைகளால் எடுத்துக்கூற முடியாமை (Ineffability)

“சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே” – அருணகிரிநாதர்

மெய்ப்பொருளை நேருக்கு நேரே அகக் கண்ணால் பார்க்கும் போது பெறும் அனுபவத்தை எதிர்மறைவாய்ப்பாட்டால் (Negative) மட்டுமே கூறமுடியும். அருணகிரிநாதர் தமது திருப்புகழில் பேசொணாதது, கூறொணாதது, அளக்க முடியாதது என்று நீளமாக எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்திப் பாடுகிறார். தாயுமானவர் “சும்மாயிருக்கச் சுகம் சுகம் என்று சுருதி எல்லாம்” என்கிறார். சைவ அநுபூதியாளரில் ஒப்பாரும் மிக்காருமற்ற திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்,

“ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா
சுடர் விட்டுளன் எங்கள் சோதி”

என்கிறார். ஒருவர் தம் உள்ளே அனுபவிப்பதை எந்தவிதமாயும் வெளிப்படுத்த முடியாது. அதைக்குறித்து ‘இது இப்படி இருந்தது’ என்று வருணிக்க முடியாது என்றே பற்பல அநுபூதிமான்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அனுபவத்தை இன்னொருவருக்குத் தூக்கிக்

கொடுத்து விட முடியாது. (பழந்தமிழ் இலக்கியத்தில் அகப் பொருள் என்பதற்குக் கூறப்படும் வரைவிலக்கணம் போல)

2. புத்திசார் இயல்பு (Noetic Quality)

உணர்ச்சிகளின் நிலையை ஒத்து இருந்தாலும் அநுபூதி நிலைகள், அவற்றை அனுபவித்தவர்களுக்கு அறிவுநிலைகளாயும் தெரியும். உண்மையின் ஆழத்தை – ஆய்வுமுறையான புத்தியினால் (Intellect) எட்டமுடியாத பகுதியை – நுண்காட்சியால் (Insight) காணும் நிலைகள் அவை. ஒளிகான்று எமக்குக் காட்டுபவையாய் வெளிப்பாடுகளைத் (Revelations) துல்லியமாக முன்வைப்பனவாய் இருப்பவை; அவை வாயால் வருணிக்க முடியாதவையாய் இருந்தாலும் கருத்தாழம் உடையனவாய், முக்கியமானவையாய் உள்ளவை; பொது விதியாக அவ்வனுபவத்தின் பின் விநோதமான அதிநிச்சயத் தன்மையுடையனவாய்க் (Sense of Authority) காணப்படும். இங்கு கூறிய (1) வார்த்தைகளால் விளக்க முடியாமை, (2) புத்திசார்ந்த இயல்பு ஆகிய இரண்டும் இருந்தால் அந்த நிலையை அநுபூதி நிலை என்று கூறலாம். மேலும் இரண்டு இலட்சணங்கள் சற்றுக்குறைந்த அளவு தெளிவாக இருக்கும். இவை வருமாறு:

3. சொற்பகாலம் நிலைத்திருத்தல் (Transiency)

அநுபூதி நிலைகளை நீண்டநேரம் உள்ளத்தில் நிலைத்திருக்கச் செய்யமுடியாது. மிகமிக அரிதான சம்பவங்களில் மட்டுமே நீண்டநேரம் இருக்கும். பொதுவாக அரைமணி அல்லது ஒரு மணிநேரம் மட்டுமே நிலைத்திருந்து பின் அன்றாட, சாதாரண நிலைக்கு மீண்டுவிடும். (சாதாரண நிலையை விழிப்பு நிலை அல்லது சாக்கிரம் (ஜாக்ரத்) awareness என்று கூறுவர்.) அந்நிலை மங்கி மறைந்தபின் அதன் இயல்பு பற்றி நினைவிலிருப்பதை வைத்து ஓரளவுக்குத் தான் விளங்கப்படுத்தலாம். பூரண விளக்கம் தரமுடியாது; ஆனால் அந்நிலை திரும்பவும் வரும்போது அதனை இன்னது தான் என்று அவதானிக்க முடியும். ஒவ்வொரு அனுபவத்தின் போதும் அது அபிவிருத்தியடைந்து வருவது தெரியும். உள்நிறைந்த திரு(ஆன்மீக செல்வச் செழிப்பு)வும், முக்கியத்துவமும் அதிகரிக்கும்.

4. தன் செயலின்றிப் பிறர் செயலுக்கு ஆட்பட்டிருத்தல் (Passivity)

ஒருவருக்கு அநுபூதிநிலை தொடங்கும் ஆரம்ப அடையாளங்கள் காணப்படும். சில செயற்பாடுகளை அவர் தானே செய்வார். மனத்தை ஒருநிலைப்படுத்தல் (ஏகாக்கிர சித்தம்) உடல்சார்ந்த சில செயல்களை ஆக்குதல், அநுபூதி நிலை பற்றிய கையேடுகள் குறிப்பிடும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்றவற்றைச் செய்வார். ஆனால் அநுபூதி அவஸ்தை (உணர்வு நிலை) மேம்படும்போது அதனை அநுபவிப்பார். தன் சொந்த நினைவு செயலிழந்து விடுவதையும், வேறொரு உயர்ந்த சக்தி தன்னை ஆட்கொண்டு இயக்குவதையும் உணர்வார். (உளவியலாளர் கூறும் இரண்டாம் நிலை (Secondary) அல்லது மாற்று ஆளுமை[1] (Alternative Personality) யுடன் இவ்வனுபவத்தைத் தொடர்புபடுத்திச் சிலர் கூறுவர். தீர்க்கதரிசன வாக்கு[2], தன்னியக்கமாக எழுதுதல்[3] (Automatic Writing) தான் ஊடகமாயிருந்து தன்னை மறந்த நிலையில் பேசுதல் போன்றவை உளப்பிறழ்வால் வருபவை என்பது விஞ்ஞானப் போக்குடைய உளவியலாளரின் கருத்து. இப்படியான செயற்பாடுகள் இருந்தபின் அநுபூதி நிலை மாறி, மீண்டும் சாக்கிர நிலைக்கு வரும்போது தாம் சொன்னதை, செய்ததை நினைவுகூர முடியாதிருப்பார். அவரது அகவாழ்வில் எவ்வித மாற்றமும் இராது. (முன் உள்ள குறைபாடுகள் எல்லாம் அப்படியே இருக்கும்) இதனை அளவெட்டி பொ. கைலாசபதி மிகச்

சிறப்பாக விளக்கியுள்ளார். (புத்தி விருத்தியில் மூன்றாம் தளமான சுட்டிப்பான கிரகிப்பில் நிற்பவர் *சத்தை*க் குறிப்பால் உணரும்போது காணும் காட்சி தோன்றும் கணத்தில் இருக்கும். பிறகு தெரியாது)

இந்த நான்கு இயல்புகளும் உள்ள அநுபவ நிலைகள் பற்றி ஆழமான கவனம் செலுத்தியுள்ளனர் உளவியலாளர். உண்மையான அநுபூதிமான்கள் தம் அனுபவங்களை வரன் முறைப்படுத்தி விளக்கியும் அதற்கென ஒரு மெய்யியலை வகுத்தும் வைத்துள்ளனர்.

இந்த முகவுரையோடு நாம் எடுத்துக் கொண்ட விடயத்துக்குள் நுழைவோம். அநுபூதிநெறி வரலாற்றில் புராதன இந்தியா, சீனா, யப்பான், கிரேக்கம், மத்தியகால ஐரோப்பா ஆகியவை இடம்பெறுகின்றன. அவைகளை விரித்துரைக்காமல் நேரே ஸ்பானிய அநுபூதி நெறிகளுக்குச் செல்வோம்.

பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடு ஸ்பெயின். இஸ்லாமியரது அரபிக்மொழி வழியே கிரேக்க சிந்தனைகளும், கிழக்குத்தேசக் கருத்துகளும் பரவின. சூ.்.பி (Sufi) எனப்படும் இஸ்லாமிய அநுபூதிநெறி ஒருசில நல்லோர் மூலம் அங்கு விதைக்கப்பட்டது. இஸ்லாமிய ஆட்சிமுடிவடைந்து, சார்ள்ஸின் எழுச்சியுடன் ஸ்பெயின் உலகவல்லரசாக உதயமாயிற்று. அந்த எழுச்சிக்கு வழி செய்த நிகழ்ச்சி பேடினனட் இளவரசனும் இஸபெல்லா அரசியும் மணமுடித்து தம் சிற்றரசுகளை இணைத்தமையாகும். அடுத்து வந்த ஐந்தாம் சார்ள்ஸ், இரண்டாம் பிலிப் மன்னர்கள் காலப்பெரும்புகழ், ஸ்பெயின் நாட்டுக்கு ஐரோப்பாவிலும், உலகெங்கும் அதிகார வளர்ச்சியைத் தந்தன. இதே சமயத்தில் ஸ்பானிய மொழி – கலாசார வளர்ச்சியும், கிறிஸ்தவ மடங்களின் பெருக்கமும் மக்களது அகவாழ்விலும் புது மாற்றங்களைத் தந்தன. கலாசாரம், பண்பாடு என்ற உலகியல் சிறப்புகளுடன் ஆன்மீக மறுமலர்ச்சியும் எழுச்சியுற்றது. அதன் இரண்டு சிகரங்களாய்த் திகழ்ந்தவர்கள் அவிலா நகரத்துப் புனித திரேசாவும், புனித சிலுவை அருளப்பரும் ஆவர். இவர்களுக்குள்ளும் புனித தெரேசாவின் (1) சுயசரித்திரம் (2) பூரண வாழ்வுக்கு வழி (The Way of Perfection) (3) உன்னத சங்கீதம் பற்றிய தியானங்கள் (4) அகத்து அரசமாளிகை என்கின்ற நாற்பெரும் தூண்களை நாட்டி கிறிஸ்தவ ஞானவாழ்வு என்ற மாமண்டபத்தை அமைத்தார். அவரது வாழ்வை முதலில் பார்ப்போம்.

## அவிலா புனித தெரேசா (1515 – 1682)

### இளமைப்பருவம்

ஸ்பெயின் நாட்டின் உயர் வணிக குடியிலே, பேடினனட் இசபெல்லா அரசர் காலத்தில் பிறந்தார். அகஸ்தீனிய கன்னியர் மடத்தில் கல்வி கற்றார். உயர்குடி வழக்கங்களை அனுசரித்தார். இரண்டாம் பிலிப் மன்னனின் ஆட்சியில் பல போராட்டங்களின் எழுச்சி, வீழ்ச்சிகளைப் பார்த்தார். (உதாரணம் புரட்டஸ்தாந்து எழுச்சி). Romance எனப்படும் கற்பனாதீத இலக்கியங்களைப் படித்தார். (அவற்றில் வீண்காலம் போக்கினேனே என்று பிற்காலத்தில் வருத்தப்பட்டார்) 1935ல், 20ம் வயதில் கார்மல் சபைக் கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பெரும்பாலும் உடல் நலமின்றி வருந்தினார்.

இவரது பாட்டனார் தொலெதா (Toleda) பிரதேச வணிகர். யூதராயிருந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர். அவிலா நகரில் குடியேறி வணிகராயிருந்தார். அவரது மக்களுள் ஒருவர் அலொன்சோ (தெரேசாவின் தந்தையார்) 1805ல் மணம் செய்தார். இரண்டு பிள்ளைகளைப் பெற்றபின் அவரின் மனைவி இறந்தார். பின் மறுமணம் செய்து 10 பிள்ளைகளைப் பெற்றார். அம்மனைவியும் இறந்தார். தெரேசா 28 பங்குனி 1515 அன்று

பிறந்தார். வீட்டில் எழுத வாசிக்கக் கற்றார். அருள் மாதா கன்னியர் மடத்தில் இல்லாளுக்குரிய பயிற்சிகளைப் பெற்றார். தலைமைத் தாயர் டோனா மரியா ஆன்மீக லட்சியங்கள் நிறைந்தவர். பிரார்த்தனையின் மகிமை பற்றி அடிக்கடி பேசுவார். தெரேசா துறவு வாழ்க்கை பற்றி யோசிக்கலானார். வசதிமிக்க வீட்டு வாழ்வு, தோழியர் உறவு என்பவற்றை விடவும் மனமில்லை. தோழியர் எல்லாரிலும் இனியராயிருந்த டோனா மரியாவின் அன்பான நெருக்குதல் மறுபுறம் இழுக்கிறது. உள்ளத்தில் இருவித ஈர்ப்பு நெருக்கடியைத் தோற்றுவித்தது. நோயுற்றார். சகோதரி வீடு செல்லப் புறப்பட்டார். வழியில் ஒரு சிறியதகப்பனார் துறவியாயிருந்த இடத்தில் சிலகாலம் தங்கினார். அவர் புனித ஜெரோமின் கடிதங்கள் என்ற அரிய நூலைக் கொடுத்தார். அது அவரின் திடசித்தத்தை வலுப்படுத்தி, துறவு நெறியைக் கைக்கொள்ளும் தீர்மானத்தை எடுக்கச் செய்தது. ஆனால் பிரிவுத்துயரத்தைச் சகிக்காத தந்தை சம்மதம் தரவில்லை.[4]

"சுற்றம் என்னும் தொல் பசுக்குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் (மாணிவாசகம்)

தெரேசா அப்பன் வீட்டை விட்டு இரசகியமாக 1535ல் புறப்பட்டார். அப்போது அவருக்கு வயது இருபது.

"பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்,
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே"

என்னதான் இருந்தாலும் பெற்ற தந்தையல்லவா? தாயாயும் தந்தையாயும் வளர்த்தவர் அல்லவா?

அகப்பொருள் இலக்கியத்தில் பாலை என்ற திணை பிரிவைக் குறிப்பது. பந்தங்களைப் பிரிவது பாலை பிறந்த நாள் முதல் வளர்ந்த பற்றுக்களைத் துறந்து ஆன்ம நாயகனின் பின் செல்லத் துணிவது. சாதாரண மக்களால் நினைக்க முடியாதது. மாணிக்க வாசகர் தமது திருக்கோவையாரில் கூறுகிறார்: 'தலைவி (ஆன்மநாயகி) தோழியைத் தழுவினாள். தான் வளர்த்த நாகணவாயையும், கிளியையும் என்னிடம் ஒப்புவித்தாள். தான் வைத்து விளையாடிய பாவையையும் தந்தாள். அருளின் ஈர்ப்புக்கு ஆட்பட்டு உடன் போக ஆயத்தமானாள். வெம்மையாகிய வனாந்தரமும் அவளுக்குக் குளிர்ந்த சோலையாகத் தோன்றியது.' என்கிறாள் தோழி.

இதனை புனித தெரேசாவே தன் சுயசரிதையில் எழுதுகிறார் (அத்தியாயம் 4) "தந்தை வீட்டை விட்டு வெளியேறியபோது பிரிவுத்துயர் மிகக் கொடியதாக உணர்ந்தேன். மரணத்தைத் தழுவும் போது எவ்வளவு துன்பம் வருமோ அவ்வளவு அதிகமாயிருந்தது. என் எலும்பு ஒவ்வொன்றும் நொருங்கிய உணர்வு ஏற்பட்டது. தந்தை, உறவினர் மேல் கொண்ட அன்பை வெல்லும் அளவுக்கு இறையன்பு என்னிடம் இல்லை. இறையருள் இருந்தபடியால் நான் தொடர்ந்து துறவு நெறியில் நிலைக்க முடிந்தது. அவர் அளித்த துணிவே துணையாகக் கொண்டு எப்படியோ என் பயணத்தை மேற்கொண்டேன். இருபது ஆண்டுகள் உள்ளத்துள் போராடியும் இறைவனுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை முற்றாகக் காப்பாற்றவில்லை".

அத்தியாயம் ஆறில் கூறுகிறார்: "தனிமையை நாடி இருப்பதில் திருப்தி இருந்தாலும் சந்திப்பவர்களுடன் இறைவனது அருட் கொடைகள் பற்றி அடிக்கடி பேசுவதில் அதிக இன்பம் கண்டேன். அத்துடன் வசதிகிடைத்தால் உலகியல் விடயங்களையும் பேசி நேரத்தை வீணாக்கும் போக்கும் இருந்தது. இது விலக்கப்படவேண்டும். நாவடக்கம் வேண்டும் எனத் தெரிந்திருந்தும் அதை மனம் நாடிய குற்றம் என்னிடம் இருந்தது. மடங்களில் கூடிய சுதந்திரம் கொடுப்பதும், இறைவழியை நாடாதவர்களுடன் தொடர்பு வைப்பதும் நரகத்துக்கு

வழி என அனுபவத்தில் கண்டேன்". (இதனால் பின்நாளில் மடங்களின் விதிகளைக் கடுமையாக்கி, உண்மைத் துறவுப் பயிற்சிக்கு வழிசெய்தார்)

பிரார்த்தனை ஒன்றே உள்ளத் தூய்மைக்கு வழி. மனம் தனக்குப் பிடித்த போக்கில் அலைய விரும்பும் போது செபம், தியானம் போன்றவற்றில் ஈடுபடுவதால், மனத்தைக் கடிவாளம் போட்டு அடக்கி, ஆன்மா விரும்பும் பாதையில் செலுத்தலாம் என்பது அவர் கொள்கை. தீவிரமான பயிற்சிகள் உடலையும் உள்ளத்தையும் நலியச்செய்தன. ஆனால் மிகத் தீவிரமான சமய அனுஷ்டானங்களில் (சம்ஸ்காரங்களில்) exercises ஈடுபட்டார். (சம்ஸ்காரம் என்ற வடமொழிச் சொல்லுக்குத் தன்னைத் தானே தூய்மை செய்தல் என்று பொருள்) "நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி" (தொழிலர் - exercisers) என்கிறார் திருஞானசம்பந்தர். இவர் தமிழ்ச் சைவ அநுபூதிமான்களின் சிகரம் என மதிக்கப்படுபவர். "நோயினும் பிணியும் அருந்துயரமும் நுகருடைய வாழ்க்கை ஒழியத் தவம் வேண்டும்" என்கிறார். தெரேசா அம்மையாருக்கு மிகவும் ஆழமான விழிப்புணர்வு உள்ளத்தில் முகிழ்த்தது. தாம் விரும்பிய உருவமாகத் தியானித்த இயேசுநாதரின் காட்சி அடிக்கடி தோன்றியது. (இந்து மரபில் 'இஷ்டதேவதா' என்பர்) அநுபூதி நெறியின் ஆழத்தை, உண்மையை, உணராத மேனாட்டு விஞ்ஞான உளவியலர் இக்காட்சிகளை வெறும் மாயக்காட்சி, மருட்சி (Hallucination) என்பர். குருடர்கள் உலகிலுள்ள எல்லாருமே குருடர் என்றே வாதாடுவர். தனக்குத் தெரியாதது ஒன்றையும் மற்றவர் கண்டதாகக் கூறினால் ஒப்புக் கொள்ள மாட்டார். உளவியலாளர்களுள் சமய அனுபவங்களை வேறுபடுத்தி அனுதாபத்துடன் பார்த்தவரான வில்லியம் ஜேம்ஸ் (1842 – 1910) கூறுகிறார்: "அவர்களது அறியும் ஆற்றல் (Cognitive) அம்சங்களையே (திருவருளின் உதவியால்) வெளிப்பாடு நெறியில் பெற்றதன் பெறுமானங்களையே நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அவ்வறிவு ஆற்றல் எவ்வளவுக்கு உண்மையின் புதிய ஆழத்தை எட்டுகின்றது என்பதை எடுத்துக் காட்ட ஸ்பானிய அநுபூதியாளரான புனித தெரேசாவைச் சுட்டிக் காட்டலாம். அவர் இத்துறைசார் நிபுணர்களுக்கு நிபுணர் என நாம் மதிக்கும் அளவுக்குச் சிறப்பாக அநுபூதியில் பெற்ற உள் அனுபவத்தை எமக்கு விளக்கும் திறமைபடைத்தவர். அவர் தம் அநுபூதியின் உச்சத்தில் உள்ள ஒரு நிலையை இவ்வாறு வருணிக்கிறார்: ஐக்கியத்தின் உச்ச பிரார்த்தனையில், ஆன்மா இறைவன் பற்றிய பூரணமான விழிப்பு நினைவில் உள்ளது. ஆனால் இவ்வுலகம் பற்றிய விடயங்களிலும் தன்னைப் பொறுத்தவரையிலும் முழு உறக்கத்தில் இருக்கிறது. இந்த ஐக்கிய உணர்வு மிகக் குறுகிய நேரமே நிலைத்திருக்குமெனினும் அந்நிலையில் ஆன்மா எல்லா வகையான உணர்வுகளையும் இழந்து நிற்கும்; அதனால் சிந்திக்க இயலுமெனினும் எந்த ஒரு அற்ப விடயத்தையும் சிந்திக்க முடியாத நிலையிலேயே இருக்கும். ஆகவே அது தனது பொருள் அறிதிறனைப் (Understanding) பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு எந்தக் கருவியையும் பயன்படுத்த வேண்டியதில்லை. அந்த அறிதிறன் செயலிழந்து ஸ்தம்பித்து நிற்கிறது; அதனால் ஆன்மா தான் எதனை நேசிக்கிறது என்றோ, எவ்விதமாக நேசிக்கிறது என்றோ, தான் எதனைச் சித்தத்தில் நிச்சயிக்கிறது என்றோ அறிய மாட்டாது. சுருங்கக் கூறினால், அது உலகப் பொருள்களைப் பொறுத்தவரையில் முற்றாக இறந்து விட்டது. அது தனியே இறைவனால் மட்டுமே உயிரோடு இருக்கிறது. இந்த நிலையில் அது மூச்சு விடுவதற்கு வேண்டிய அளவு உயிர்ச்சக்தி தானும் உள்ளதோ என நான் அறியேன். அது அவ்வளவு சக்தி கூட இல்லாதிருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்; அல்லது அது மூச்சு விட்டாலும் தான் மூச்சு விடுகிறதாக உணராமல் இருக்கிறது. அதனுடைய அறிவாற்றல் (புத்தி – Intellect) மகிழ்வுடன் தன் உள்ளே ஏதோ நிகழுவதை உணர்வது போலத் தோன்றக் கூடும்; நிழலாடக் கூடும்; ஆனால் அது அவ்வளவு மிகச் சொற்பவலு உள்ளதாயிருப்பதால் அது எவ்வகையிலாயினும் செயற்பட முடியாது; இறந்தவர் போலவே தோற்றமளிப்பார்."

இந்த நிலை அடைவது ஆன்மாவின் முயற்சியால் மட்டும் நிகழ்வது அன்று; "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பது தான் மெய். சர்வவல்லமையுள்ள இறைவனின் திருவருளாகிய காந்தம் இரும்பு போன்ற ஆன்மாவைக் கவர்ந்து இழுத்தால் மட்டுமே இந்த நிலை எட்டும்.

"இரும்பு தருமனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் உளம் புகுந்து
கரும்பு தருசுவை எனக்குக் காட்டினை...
உன்பேரருளே" (மணிவாசகர்)
"அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள் கெட அருளும் இறைவா போற்றி" என்பதும் மாணிக்க வாசகர் வேண்டுகோள்.

இறைவன் ஆன்மாவை தன்னுடன் ஒன்றிக்கச் செய்யும் வண்ணம் உயர்த்தும் போது, அதனுடைய இயல்பான அகக்கருவிகள், புறக்கருவிகளின் செயற்பாடுகளை எல்லாம் முற்றாகச் செயலிழக்கச் செய்து விடுகிறார். அது காண்பதும் இல்லை; கேட்பதும் இல்லை; எதையும் விளங்கிக் கொள்வதும் இல்லை. தன் ஆன்மநாயகனுடன் ஒன்றுபட்ட பின் இரண்டாம் உணர்வு எதற்கும் இடமில்லை. "கங்குல் பகல் எம் கண் மற்று ஒன்றும்" காண மாட்டாது. ஆனால் இது மிகக் குறுகிய கால அனுபவமே. அந்த இன்ப அனுபவம் முடிவடையும் போது, அது உண்மையில் இருந்ததிலும் மிகமிகக் குறுகிய காலம் போலத் தோன்றும். (இனிப்பான பொருளை உண்டு முடிந்ததும், இவ்வளவு விரைவில் முடிந்து விட்டதே என நாம் நினைப்பதுண்டல்லவா?)

இறைவன் இந்தப் பக்குவ ஆன்மாவின் அந்தரங்கத்துள் தன்னை நிறுவி வைத்து விடுகிறார். அவ்வான்மா மீண்டும் தன் உணர்வு பெறும்போது, அது தன்னுள் இறைவனையும் இறைவனுள் தன்னையும் பூரணமாக ஒன்றித்திருந்ததைக் குறித்து அணுவளவு ஐயமும் கொள்வதில்லை. மணிவாசகர் இதனை:

"உடையாள் உன்தன் நடுவு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்... அரசே"

புனித தெரேசா தொடர்ந்து கூறுகிறார்: "இந்த ஒன்றிப்பு அனுபவம் ஆன்மாவில் மிக மிக அழுத்தமாகப் பதிந்து விடுகிறது; அநேக ஆண்டுகள் சென்றாலும், அவ்வித அனுபவம் மீண்டும் ஏற்படாவிட்டாலும்கூட அப்பதிவு அசையாமல் இருக்கும். ஆன்மா தான் பெற்ற இன்பத்தை, தலையளியை மறக்கவும் முடியாது. அது உண்மையில் நிகழ்ந்ததா என்று ஐயம் எழவும் மாட்டாது. நீங்கள் கேட்கலாம் 'ஆன்மா தான் இறைவனுக்குள் இருந்தது என்பதை எப்படி அறியும்? அந்த ஒன்றிப்பில் அது தன்னைக் காணவும் முடியாது; விளங்கிக் கொள்ளவும் முடியாது (அறிதிறன் இல்லையாய் விடும்) அல்லவா?' என்று, அதற்கு எனது விடை இது.

ஆன்மா அப்பொழுது அறிவதில்லை ("தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்" - அப்பர்) ஆனால் பின்னர் அந்த நினைவு நன்றாக மனதில் இருக்கும் (ஊமை கண்ட கனவு போல் அழிந்து விடாது); சுய உணர்வு அடைந்ததும் பழைய இன்ப அனுபவ நினைவு இருக்கும். வெறும் கனவுக்காட்சியாய் அன்று; இறையருளால் பெற்ற நிச்சயத்தன்மையோடு கூடியதாய், தெளிவாய் அசைவின்றி இருக்கும்.

புனித தெரேசா தமக்குத் தெரிந்த ஒரு உதாரணம் காட்டுகிறார்: "நான் அறிந்த ஒரு பெண் எல்லாப் பொருளிலும் கடவுளின் இருப்பு, ஒன்றில் சாந்நித்தியமாக (Presence) அல்லது சக்தியாக (Power) அல்லது சாரமாக (Essence) வே அமைந்திருக்கும் என்பதை

அறியாதிருந்தார். ஆனால் நான் குறிப்பிட்ட இறையருள் பெற்ற பின் இந்த உண்மையை அசைக்க முடியாத அளவுக்கு நம்பினார். ('இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி... நின்றவாறே - அப்பர்) ஆயினும் அவர் ஒரு அரைப்படிப்பு ஆளைக்கேட்டபோது, அவர் (இப்பெண் அனுபவம் பெறமுன் முன்னிருந்த நிலையில், அறியாமையில் இருந்தபடியால் அவர் இறைவனின் அருள் மட்டும் தான் நம்முன் பிரதிபலிக்கின்றது என்று சொல்லிவிட்டார். அப்பெண் அவரது விடையை நம்பவில்லை. சமயசாஸ்திரம் உணர்ந்த மேதைகளை (Doctors) வினவிய பொழுது அவர்கள் அப்பெண்ணின் நம்பிக்கையே சரி என உரைத்தனர். அப்பெண் மனத்திருப்தியடைந்தார்."

புனித தெரேசாவின் தொடர்ச்சியான விளக்கத்தைப் பார்ப்போம்: "நீங்கள் கேட்கலாம்: தான் காணாததைக் குறித்து எப்படி அவ்வளவு நிச்சயமாகக் கூற முடியும் என்று. இதற்கு நான் விடைதர முடியாது. எங்கும் நிறைந்த பரம் பொருளின் இரகசியங்களுள் ஒன்று; என்னால் இதை ஊடுருவிக்காண முடியாது. நான் உண்மை உரைக்கின்றேன் என்பது மட்டும் எனக்குத் தெரியும். ஒரு ஆன்மா இப்படியான நிச்சயம் பெறாமல், தான் இறை ஒன்றிப்பில் திளைத்ததாகக் கூறினால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்."

இவ்வாறு உயர் அனுபவம் பெற்ற அநுபூதிமான்களிடம் காணக் கூடிய பொதுத்தன்மை 1. எதிலும் இன்பமே எதிர்பார்க்கும் மனநலம் (Optimism) 2. ஒரு பொருண்மைவாதம் (Monism) என்பனவாம் ('ஒருவன் என்னும் ஒருவன் காண்க'- 'ஏகன்')

## புனித தெரேசா ஆக்கிய நூல்கள்

இவர் தம் பெருமைகளை மூடிமறைப்பதிலேயே அக்கறை உடையவராயிருந்தார். ஆனால் அவரது ஆன்மீக உயர்வை அறிந்த சிலர் அவரை அணுகி அனுபவங்களை எழுதும்படி கேட்டனர். "ஆன்மீக சான்றுகள் (Spiritual Testimonials) என இரண்டு எழுதப்பட்டன. அவரது மாகாண திருச்சபை முதல்வர் (Provincial) அவரது வரலாற்றை எழுதும்படி கட்டளை இட்டார். அவர் பொதுவாக எழுதிய முதல் வடிவத்தை 1562ல் பிதா காஷியா விடம் கொடுத்தார். அது ஒரு கடிதம் போலவும், உரையாடல் போலவும் இருந்தது. அதை விசாரித்து எழுதும்படி அவரிடம் கல்விமானான டொமினிக்கன் குரு கொடுத்தார். (இது இப்போது இல்லை) தெரேசா நிறுவிய புதிய மடத்தில் சிறிய அறையில், கதிரை மேசை கூட இல்லாத நிலையில் இரண்டாவது வரைவு மலர்ந்தது. (1564) அத்தியாயங்கள் 11 முதல் 22 வரை சேர்க்கப்பட்டன. அவற்றில் பூந்தோட்டத்துக்கு நீர் ஊற்றும் உவமையைக் கொண்டு அகப்பிரார்த்தனையை நாலு படியில் வைத்து விளக்கியுள்ளார். 32 முதல் 36ம் அத்தியாயங்களில் புனித சூசையப்பர் மடம் நிறுவிய வரலாறு தரப்பட்டுள்ளது. புறவிடயங்களை வருணிக்கும் போது அச்செயற்பாடுகளுக்கு அடித்தளமாயிருந்த உளப்பாங்குகள் தரப்படுவதால் இப்பகுதி வெறும் சரித்திரம் எனக் கருதலாகாது. அதில் உள்ளத்து உணர்வு நிலையின் உயர் அம்சங்கள், காணாமல் காணும் காட்சி (Passive Perception) (அதாவது தன் முயற்சியின்றி திருவருள் காட்டக் காணும் காட்சி). ("காண்பார் ஆர் கண்ணுதலாக் காட்டாக்காலே — அப்பர்) கடவுட் காதல் – கடந்து நிற்கும் பொருளான கடவுளுடன் கொண்ட தொடர்பு, ஆன்மீக வாழ்வு ஆழமும் உறுதியும் மிகுதல் போன்ற விடயங்கள் விரவிவருகின்றன. (உயர் அநுபவங்களைப் பெற்றவர்கள் உலகியல் முயற்சிகளில் ஈடுபட்டாலும் அந்த உந்தலால் பெற்ற பட்டறிவு தினசரி வாழ்வில் பிரகாசிக்கும் என்பதற்குச் சான்றாகும்) சுயசரித்திரம் என்று குறிக்கப்பட்டாலும் இந்நூல் ஒரு தனித்தன்மை வாய்ந்தது அதன் சாரம் வருமாறு: அவர் புறவாழ்வை மூன்றாகப் பிரிக்கலாம்.

முதற்பகுதி: குடும்பவாழ்வு. முதல் இருபது ஆண்டுகள் (1515 – 1535)
இரண்டாம்பகுதி: மடத்தில் துறவறம் பூண்டு வாழ்ந்த இருபது ஆண்டுகள் (1535 – 1562)
மூன்றாம் பகுதி: இறுதி மூன்று ஆண்டுகள் (1562 – 1565), புதிய கார்மல் மட வாழ்வு. அத்தியாயம் 9,1-8 தன்னை ஒறுத்த துறவற வாழ்வு (1554 வரை) அத்தியாயம் 9,9 - 10,1 அடுத்த இரண்டு ஆண்டுகள் ஆன்மீக அருட்பதிவு. இறைவனது சாந்நித்தியத்தை உள்ளே உணர்தல், அமைதி ஒன்றிப்பின் முதல் சுவைகளை அனுபவித்தல். அத்தியாயம் 19,9-25,5 கழிபேருவகை (Rapture), தன்னை மறந்த தீவிரநிலை, 1560 வரை தம்குரு(Confessor)வின் கட்டளைப்படி கழிபேருவகை நிலைதனைத் தடுக்கும் முயற்சி. அத்தியாயம் 7,2: 1560 இல் கிறிஸ்துவின் மானுடத்தன்மையை அறிவு (புத்தி) ரீதியாக உணர்தல். (1561) அத்தியாயம் 28.3 திருக்குமாரன் எழுந்தருளியதைக் கற்பனைக் காட்சியாகக் காணல். அத்தியாயம் 29.2 (1561 – 1563) இல் இக்காட்சி இன்னும் உயர்ந்த நிலையில் தோன்றியது. அத்தியாயம் 29.10: "இப்புண் உள்ளத்தில் பெரும் துன்பத்தைத் தருவது எனினும் அந்த அனுபவத்தின் இன்பத்தைச் சொல்லமுடியாது" என்று வருணிக்கிறார். அத்தியாயம் 20, 12 – 13: மேலும் உயர் நிலைகளை அனுபவித்தல் - தனிமையும், ஆன்மீக நோவும் தோன்றினாலும், கழிப்பேருவகை போல இதுவும் அக, புறக் கருவி காரணங்களை ஸ்தம்பிக்கச் செய்து விடுகிறது. ('இக்காயம் கீறுகின்றிலேன்' இறுதியில் வருகிறது) அத்தியாயம் 27.11 தான் கூறுவது உண்மையே. எந்த இறையியல் நிபுணர்கள் முன்னும் நான் கூசாமல் என் அனுபவ உண்மையைக் கூறுவேன்."

"திரித்துவ உண்மை, பிற உன்னத அனுபவ நிலைகள் மாண்பு மிக்கனவே. முன்னர் சொல்ல இயலாத நிலை (நாக்குழறும் நிலை) யிலிருந்து இப்போது இறையருளால் சொல்ல இயலும் நிலைக்கு வந்துள்ளேன். இவை என் மூளைக்குள் இருந்து வந்தவை அல்ல; என் குரவர், என் எஜமானர், என் பிரபு எனக்குத் தந்தவையே ("எனதுரை தனதுரையாக" – சம்பந்தர்) இறைவன் தந்த அனுபவ அறிவே அன்றி, நான் புத்தகங்களில் படித்தவை அன்று. அத்தியாயம் 22.3 ஒன்றிணைப்புப் பிரார்த்தனை என்பது வானத்திலிருந்து அருள்மழையாகப் பொழிந்ததே. (அத்தியாயம் 11-22) அத்தியாயம் 27.9 நீண்ட பல ஆண்டுகள் அருமுயற்சி செய்தும், இடைவிடாது போராடியும் அடையமுடியாத இதயக்குகையின் ஆழ்ந்த பகுதிகளில் உறங்கியிருக்கும் சக்தியையும் வலுவையும், ஓரிரு அமானுஷ்யமான (Supernatural) திருவருட் பதிவினால் அடைய முடியும். (சத்திநிபாதம் என்பர் சைவர்) ஒருமுறை அருள் மழையின் ஒருதுளி கிடைத்தாலும் போதும்; அது ஆன்மாவை முற்றாக மாற்றிவிடும்.

அவிலா அன்னையின் வாழ்க்கைக் குறிக்கோள் அநுபூதி நெறியை உலகுக்குக் காட்டுவதே. அருளின் பதிவைக் குறைத்துப் பேசுபவர்களை அவர் எதிர்த்து உரைக்கின்றார்.

அத் 23.13 ஏதோ சில (யோக) முயற்சிகளைச் செய்த உடன் அருள்மழை பொழிந்து விடும் என அற்பமாக மதிக்கும் போக்கினரைக் கேலி செய்கிறார்: தவளை பறக்கும் என்று கூறுவது போன்றதே. தன் முயற்சியால் அற்ப உயரம் பாய்வதும் வானத்தில் பறப்பதும் ஒன்றல்ல. மன அமைதியுடன் பற்றின்றி, தாழ்மை உணர்வுடன் காத்திருப்பதே ஒருவரது கடமை. மிகுதி இறைவன் கிருபையால் வரும். இடைவிடாது அழுது, தொழுது திருவருள் உள்ளத்தில் பெருக வேண்டும் என்று பிரார்த்திப்பது ஒன்றே சாதகருடைய, தேடுபவருடைய முறை. பிரார்த்தனை என்ற கதவை மூடிவிட்டு, அவரது அருள் கிட்டும் என்றிருந்தால் அவரால் என்ன செய்ய முடியும். அத்தியாயம் 8.9: தெரேசா தமது கையெழுத்துப் பிரதியைக் குருவுக்குக் காட்டி அவர் தன் ஆன்மீக முயற்சிகளுக்கு ஒப்புதல் அளித்ததுடன் திருப்தியடையவில்லை. அக்காலத்தில் ஸ்பெயினில் பிரசித்திபெற்ற ஆன்மீகப் பெரியாராகிய அவிலா புனித ஜோன் அத்தலூஷியாவின் அப்போஸ்தலரின் அங்கீகாரம் பெறவிரும்பினார்.

அவர் அதைப்படித்து முழுத் திருப்தி தெரிவித்துக் கடிதம் எழுதினார். (12 செப்ரெம்பர் 1568 பலர் வேண்டுகோட்படி சில பிரதிகள் செய்யப்பட்டன)

பணக்கார இளவரசி ஒருவர் தாம் பெரிதும் விரும்பிப் படிக்கவென்று அதை வாங்கி, தகாதவர் கையிலும் கிடைக்கும்படி கவனம் இன்றி விட்டதால், அறிவிலிகள் புனித தெரேசா உதவாத விடயங்களை பிரசாரம் செய்கிறார் எனக் கதை பரப்பினர். "பன்றிக்கு முன்னே முத்தைப் போட்டதாயிற்று" அதனால் மதவிசாரணைச் சபை(Inquisition)யிடம் பிரதிபோயிற்று. நல்லகாலம் அச்சபை அதனை நல்லார் ஒருவரிடம் கொடுத்ததால் அது தப்பியது. ஆனால் புழக்கத்துக்கு விடாமல் பூட்டி வைத்து விட்டனர். தெரேசா காலமாகிய பின் 1588ல் மட்றிட் நகரின் தலைவி இயேசுவின் மதர் ஆனா என்பவர், அதைப் பெற்று அச்சுப் பதிவுக்கு அவரது நூல்களை ஆயத்தம் செய்த அகஸ்தீனியன் குருவிடம் கொடுத்தார். மூலப் பிரதி இன்னும் 21ம் பிலிப் மன்னர் தேடி வைத்த நூலகத்தில் இருக்கிறது. புனித அகஸ்தீன், புனித ஜோன் கிருசோஸ்திரம் ஆகியோரது நூல்களுடன் பேணி வைக்கப்பட்டது. அவர்களைப் போலவே. அவிலா தெரேசாவும் திருச்சபையின் உயர் கலாநிதியாக (Doctor of the Church) 1970 இல் அறிவிக்கப்பட்ட பெருமை பெற்றார்.

இந்நூல் தொடக்கத்திலிருந்தே சான்றோர் விரும்பும் நூலாயிற்று. 1611ல் ஆங்கில மொழி பெயர்ப்பு வந்தது. இதுவரை 21 மொழிகளில் பெயர்த்து எழுதப்பட்டுள்ளது.

## காரைக்கால் அம்மையார்

காரைக்கால் நகரில் வணிகர் குலத்தில் பிறந்தவர். இயற்பெயர் புனிதவதியார். செல்வச் செழிப்புடன் சமயத்திருவும் பொழிய வளர்க்கப்பட்டார். இறையருள் பூரணமாகப் பெற்ற வளர்ப்பு வருங்காலத்தில் அவர் புனித அம்மையாராகும் அனைத்து நன்மைகளும் நிறைந்தவராகக் காட்டியது. ஒவ்வொரு ஆன்மாவின் இயல்பான சில குறைபாடுகளை நீக்க இறைவனது திருவருள் அதற்கேற்ற சம்ஸ்காரங்களை (Sacraments) வகுத்திருக்கிறது.[5] அம்மையார் மணப்பருவம் எய்திய போது பெற்றோர் மற்றொரு செல்வ வணிகர் குல மாப்பிள்ளையான பரமதத்தனை மணமுடித்துத் தம் அயலிலேயே வீடுகட்டிக் கொடுத்தனர். அவன் அவ்வூரிலேயே வியாபாரத் தொழில் செய்ய வசதி செய்தனர். விருந்தோம்பல் இல்வாழ்வின் பெரும் பண்பு. அதில் குறைவில்லாமல் வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் யாரோ கொடுத்து விட்ட இரு மாம்பழங்களை வீட்டுக்கு அனுப்பினான். ஒரு துறவி வீட்டுக்கு வந்த போது, புனிதவதியார் கறிகள் சமைத்து முடியாத படியால், சோற்றை ஒரு மாம்பழத்துடன் கொடுத்தார். பிறகு கணவன் வீடு வந்த போது உணவளித்து, மாம்பழத்தையும் வெட்டிக் கொடுத்தார். அதன் சுவையில் மகிழ்ந்தவன் மற்றப் பழத்தையும் கேட்டான். உள்ளே சென்ற அம்மையார் ஏக்கத்துடன் இறைவனை நினைத்தார். கையில் ஒரு பழம் வந்திருந்தது. அதை உண்ட கணவன் "முன்னரிலும் வேறுபட்ட இன் சுவையுடையதாயிருக்கிறதே: என்ன காரணம்?" என்று கேட்டான். உண்மையை மறைத்தால் கணவனுக்குப் பொய் சொன்ன பாவம். நடந்ததைக் கூறினார். கணவன் நம்பாமல், 'அப்படியானால் இறைவனிடம் மற்றொரு பழம் பெற்றுத்தா'? என்றான். பெற்றுக் கொடுத்ததும், அவன் அச்சம் அடைந்தான். இத்தெய்வத்தன்மை வாய்ந்த பெண்ணுடன் உலக முறையில் வாழ முடியாது என முடிவு செய்தான். வெளியூர் சென்று வணிகம் செய்து மற்றொரு பெண்ணை மணம் செய்து வாழ்ந்தான். தான் பெற்ற மகளுக்கு தான் தெய்வமாகப் போற்றிய புனிதவதியின் நாமத்தையே சூட்டினான். இவனது செய்தியை அறிந்த பெற்றோர் புனிதவதியாரை அழைத்து வந்தனர். பரமதத்தன் அவர் பாதத்தில் விழுந்து வணங்கினான். பெற்றோர் விளக்கம் கேட்டனர். அவன் நிகழ்ந்ததைக் கூறினான். புனிதவதியார் 'இனி இவ்வுடல் எனக்கு வேண்டியதில்லை. அழகற்ற பேயுருவம் தா, இறைவா!' என்று கேட்டுப் பெற்றார்.

அவருடைய செம்பால் செய்த திருவுருவம் சோழர்காலக் கலைப் பொக்கிஷங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது (அனுராதபுரம் தொல்பொருட் சாலையில் இருந்தது. அதன் கீழ் காளி என்று எழுதியிருக்கிறார்கள் தமிழ் மரபு தெரியாதவர்கள்) "கொங்கை திரங்கி நரம்பு எழுந்து" என்ற காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிக வரிகளை நினைவர். "அப்பா நீ ஆடும் போது, நின் அடிகளின் கீழ் இருக்க வேண்டும். நீ ஆடும் போது நான் மகிழ்ந்து பாடவேண்டும்" என்று வரம் கேட்டதாக நினைப்பர். கையில் தாளத்துடன் எலும்புந்தோலுமாயிருக்கும் அம்மை காரைக்கால் நாச்சியார் என்பதை எவரும் அறிவர். (தொல்பொருட்சாலை அதிகாரி சிங்களவன் (Pelican History of Art) இல் இவ்வுருவத்துக்குக் காளி என்று வினாக்குறியுடன் பெயரெழுதியதைப் படித்து விட்டு அப்பெயரை இங்கும் சூட்டி விட்டான்)

அம்மையின் பெருமை சைவ அடியார் வரலாறு கூறும் சேக்கிழார் பெரிய புராணத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. சைவ சமயத்துத் தலை சிறந்த நாயனார் ஆகிய திருஞானசம்பந்த மூர்த்தி அவருடைய ஊருக்குப் போன போது, அந்தப் புனித மண்ணில் தாம் கால் மிதிக்கக் கூடாது என்று ஊரை வலம் வந்து ஒரு மடத்தில் தங்கினார். இறைவன் கட்டளை பெற்ற பின்னரே சென்று பாடினார் எனப் புராணம் கூறுகிறது. அடியார் பெயர்த் தொகுப்பை (திருத்தொண்டத் தொகை) முதலில் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் "இவரைப் பேயார்க்கும் அடியேன்" என்று குறிப்பிடுகிறார். தனக்கு அழகு வேண்டாம் என்று பூவுலகில் எந்த ஒரு பெண் தான் விரும்புவார்? "செயற்கரிய செய்வார் பெரியர்" (திருக்குறள்) "தாம் கேட்டுப் பெற்ற நிலையை தாம் பாடிய 100 பாடல் அடங்கிய அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுகின்றார். "பேய் ஆய நற்கணத்தில் ஒன்றாய நாம்" என்று.

சைவ சமய இறையுணர்வுப் பாடல்கள் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இவருடைய இரண்டு பதிகங்கள் (Decads) பண்டைத் தமிழரின் பண் இசையிற் பாடப்படுபவை. அவை இரண்டும் இறைவனுடைய அழித்தல் தொழிலை, ஊழிக்காலத்திருநடனத்தைப் பாடுபவை. இனிமை, அழகு, மென்மை என்ற நல்ல அம்சங்களைப் பார்க்க விரும்புபவர்களுக்கு இது பயங்கரமாகத் தோன்றும். ஒவ்வொரு அடியவருக்கும் இறைவனின் ஒவ்வொரு அம்சத்தின் மீது ஆராக்காதல் உண்டாகும். கிறிஸ்தவ மரபில் சிலர் கன்னி மேரியின் இனிய தெய்வீகக்களை ஒழுகும் உருவத்தைத் தியானிப்பர். சிலர் குழந்தை யேசுவைக் கையில் வைத்திருக்கும் தாய்க் கோலத்தில் மகிழ்வு எய்துவர். வேறு சிலர் வியாகுல மாதாவின் சோகத் திருவுருவை மனதில் இருத்தி வழிபட்டுத் தம் துயரங்களினின்றும் விடுபடுவர். மைக்கல் ஆஞ்சலோ சிலுவையிலிருந்து இறக்கிய திருக்குமாரனின் உடலை மடியில் தாங்கிய தோற்றத்தை (Pieta – பியற்றா) நான்கு முறை சலவைக் கல்லில் படைத்தாராம். அவரது பக்தி நிறைந்த கலை உள்ளம் திருப்தியுறவில்லை. புனித தெரேசா உடல் நோயுடன் தனது நெஞ்சினுள்ளே ஈட்டி சொருகப்படுவது போன்ற தாங்கமுடியாத துயரம் உணரப்பட்டதைக் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் சூலை நோயால் வாடியதைக் குறிப்பிடுகிறார். தம்தம் மனப்போக்குக்கு ஏற்ற மூர்த்தி வழிபாடு தியானத்தின் போது மேற்கொள்ளப்படும். காரைக்கால் அம்மையார் சிவனின் உருத்திர தாண்டவத்தைத் தம் தியானப் பொருளாகக் கொண்டது பற்றி இவ்வளவு விரிவாகக் கூறவேண்டியதாயிற்று. மேனாட்டினரால் இக்காலப் பெரும் அனுபூதிமானாகக் கருதப்படும் இராமகிருஷ்ணர் தூய அன்னை வழிபாட்டில் பயங்கரமான காளியின் தோற்றத்தை வழிபடும் உருவமாக (Image) பயன்படுத்தியதை விளக்க வந்த ஒரு நவீன கல்வியாளர் கூறுகிறார்: 'மக்கள் மரணபயம், யமபயம், பயங்கரமான தோற்றத்தைக் குறித்துப் பெரும் பயம் உடையவரே. எல்லோரும் மகிஷாசுரனை அழிக்கும் காளியின் பயங்கர தோற்றத்தைப் பார்த்துப் பழகி வழிபட்டு மனதில் பயின்றால் பயம் நீங்கி விடும் என்ற விளக்கத்தைத் தருகிறார்.

காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் நட்டபாடை, இந்தளம் ஆகிய பண்களில் ஆக்கப்பட்டுள்ளது. பண் பற்றிய சில குறிப்புகள் இங்கு நினைவு கூரத்தக்கவை. பண்டைய மக்களின் வழிபாடு பெரும்பாலும் இசைவடிவிலேயே அமைந்திருந்தன. பழைய ஏற்பாட்டில் சங்கீதங்கள் (Psalms) முக்கிய இடம் பெற்றிருந்தன. புனித தெரேசா தமது சுயசரிதையில் சுமார் 21 இடங்களில் இவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். உலகப் படைப்பு சொல்லாயும் பொருளாயும் ஆக்கப்பட்டது. வார்த்தை, வாக்கு – Word was God. முதற் தத்துவம் சிவம் என்று குறித்தது மெய்ப்பொருள். அதன் அருள்வெளிப்பாடு சக்தி எனப்பட்டது. அவற்றிலிருந்து வெளிப்பட்டவை நாதம், விந்து என்ற இரண்டு தத்துவங்களும். நாதம் ஒலிவடி. அந்த முதல் ஒலியைக் கேட்கும் காதுடையவர்கள் அதன் மகிமையில் திளைத்தார்கள். உலகின் அசைவில் நாதத்தைக் கேட்டார்கள். ஷேக்ஸ்பியர் கூட "The Music of the Spheres" என்று அண்டத்தின் அடியில் மிளிரும் இசையைக் குறிப்பிடுகிறார். இந்து மரபில் "நாதப் பிரமம்" என்று பூரணப் பொருளின் உணரத் தக்க அம்சமாக நாதப்பிரம உபாசனை குறிப்பிடப்படுகின்றது. இந்த இசை தற்கால இசைபோல மனிதனது முயற்சியால் கஷ்டப்பட்டு ஆக்கப்பட்டதல்ல. ஜேர்மனிய இசை ஆக்கிய பீத்தோவன் தன் விடா முயற்சியால் பியானோ முன் இருந்து தட்டித் தட்டி இசை ஆக்கினார் என அறிகிறோம். தீர்க்கதரிசிகளின் இசை அப்படிக் கஷ்டப்பட்டு ஆக்கியதல்ல. அவர்கள் இறையருளில் மூழ்கித் தெளிந்த உள்ளத்தில் உதித்தவை அவை. வடமொழி வேதத்தில் சாமவேதகீதங்கள், தமிழில் தேவாரப் பண்கள் போன்றவை ஆன்மீகக் காதல் மீதூரப் பெற்றவர்கள் இறையனுபவ உச்சத்தில் கண்டு கேட்டு மகிழ்பவை. புனித தெரேசா சொலமன் இராசாவின் உன்னத சங்கீதத்(Song of Songs)தை தம் வரலாற்றில் எட்டு இடங்களில் எடுத்துக் காட்டும் போது எவ்வளவு ஆனந்தத்தில் திளைத்து எழுதுகின்றார்.

பண்டைத் தமிழரின் பண்கள் 108 இருக்கலாம் என்றும் அவற்றுள் திருஞான சம்பந்தர் கூடிய அளவு பண்களைச் (சுமார் 28) கண்டு, பாடியுள்ளார் என்றும் அவற்றின் மரபு அழிந்து இறுதி நிலையுற்ற காலத்தில் தான், திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி பெரிதும் கஷ்டப்பட்டு திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் பரம்பரையில் வந்த பெண் ஒருவர் பண் முறை தெரிந்தவர் என இறையருளால் அறிந்து அழைத்து வந்து தாம் தொகுத்த தேவாரங்களுக்குப் பண் அடைவு செய்தார் என்றும் சைவ மரபில் கூறப்படுகின்றது. (தற்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பல மகாநாடுகள் கூட்டி பண்ணிசைக்கும் கர்நாடக இசைக்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்துள்ளது) சைவ ஆதீனங்களில் பண்ணிசை வல்லார் என மதிக்கப்படும் ஓதுவார்கள் கூட இராகங்களைக் கலந்தும், மரபு தப்பியும் பாமர ரஞ்சகமாகப் பாடுகின்றனர். இது காலத்தின் கோலம்.[6]

காரைக்காலம்மையாரின் பண் அடைவு இல்லாத இரு நூல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒன்று அற்புதத் திருவந்தாதி 100 பாடல்கள் உள்ள தொகுப்பு; மற்றது திரு இரட்டை மணிமாலை. பின்னையதில் இரண்டு வகையான பாடல்கள் மாறிமாறி இருபது வருகின்றன. தன் நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பாங்கில் பல பாடல்கள் உள. முதற் பாடலின் சாரம் வருமாறு:

"மனமே! கொடிய துயரம் வந்து வருத்தும் போது, பயந்து, தளர்ச்சி உற்று இருப்பதை விட்டு விடு. கொஞ்சமும் தளர்ச்சியடையாமல் இறைவனை வந்தித்து வணங்குவாயாக. உலக மக்களுக்குத் துன்பம் அளித்த கங்கையைச் சடையினுள் வைத்து உலகைக் காத்தவரும், சந்திரன் தேய்ந்து அழியும் நிலையில் அடைக்கலம் கொடுத்தவருமான ஈசுவரன் இருக்கும் போது அச்சம் ஏன்?"

மற்றும் சில பாடல்கள்: "அவரைத் தலைவன் எனக் கருதிப் பாடிப் பரவி வழிபடுபவர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார் இறைவன்" "அற்பமான துன்பங்கள் வெள்ளம் போலக் குமுறிவந்து கடலில் தள்ளி வீழ்த்திவிடும் எனப் பயப்படவேண்டாம். இடைவிடாது வணங்கி, பணிந்து, பலநாளும் தலைநிமிர்ந்து நில்லுங்கள்". "மனைவி, மக்கள் தான் நமக்குக் தஞ்சம் என்று நினைப்பதை விட்டுவிடு. மனமே! இறைவன் பாதமே ஒரே ஒரு தஞ்சம் அதை வணங்கு". அவரை அடைவது எப்படி? அன்பால் தான் அடையலாம். உத்தமராய் வாழ்ந்து அவர் பணி செய்வது தான் அடையாளம்.

## முடிவுரை

சமயம் என்ற கட்டடத்துக்கு மூன்று தூண்கள் இருக்கின்றன: 1) கிரியைகள் 2) அறநெறிக்கோட்பாடுகள் 3) மெய்யியல்.

இன்று நம்மவரில் பெரும்பாலானவர்கள் வீட்டிலும், கோவிலிலும் சில சமய அநுஷ்டானங்களை – கிரியைகளை – செய்வதுடன் தம் சமயக் கடமை முடிந்தது என்று நினைக்கின்றனர். கிராமிய மொழியில் சொல்வதானால் வெள்ளிக்கிழமைச் சைவரும், ஞாயிற்றுக்கிழமைக் கிறிஸ்தவருமாகவே 99.9% மக்கள் வாழ்கின்றனர். அதனால் வாழ்நாள் முழுவதும், எவ்விதமான திருத்தமும் இன்றி புழுப்போல நாட்களைக் கழிக்கின்றனர்: அப்பர் அடிகள் சொல்கிறார்:

புழுவுக்கும் குணம் நான்கு எனக்குமதே
புழுவுக்கு இங்கு எனக்கு உள்ள பொல்லாங்கு இல்லை.
புழுவினும் கடையேன் புனிதன்தமர்
குழுவுக்கு எவ்விடத்தேன் சென்று கூடவே.

புழு உணவு, உறக்கம், இனப்பெருக்கல், பயம் என்ற நான்கு குணங்களுடன் சீவிக்கிறது. It exists; it does not live. நானும் அப்படித்தான். ஆனால் என்னிடம் உள்ள பொல்லாங்கு - மகாகொடிய பாவம் - வஞ்சகம் அதனிடம் இல்லை. "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வஞ்சகக் கள்வன் நான்". நடிப்புக்காரன் "நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான் நடுவே வீடகத்தே (மோட்சசாம்ராச்சியத்துள்) புகுந்திட நான் மிகப் பெரிதும் விரைகிறேன்". (மணிவாசகர்)

1951ல் வசித்த ஒரு சமூகவியலாளரின் கருத்து இன்றும் மனதில் உள்ளது. அவர் ஆய்வு வினா ஒன்றை லண்டனில் ஒருவரிடம் கேட்டார். அவர் சொன்ன விடை: "நான் முன்னர் ஞாயிற்றுக் கிழமை கோயிலுக்குப் போய்வருவேன். போகும் போது மக்கள் பேசிக்கொண்டு போன ஊர்க்கதையைத் தொடர்ந்து வரும்போதும் பேசுகின்றார்கள். கோவிலில் செலவழித்த நேரம், கேட்ட பிரசங்கம் அவர்களிடம் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. அதனால் போகாமல் விட்டுவிட்டேன்". தெரேசா சொன்னது போல, 'இறையருளை உள்ளே அனுபவித்த கணம் மறையலாம். ஆனால் ஆளில் மாற்றம் இருக்கும். அவர் உலகைப்பார்ப்பது, அடுத்தவருடன் புழங்குவது வேறுவிதமாயிருக்கும்.' அருளின் பதிவு ஆளில் அற்ப மாற்றத்தையேனும் உண்டாக்காவிட்டால், அவர் அருள் ஆகிய ஒளிக்கிரணம் தன்னுள்ளே நுழையவிடாமல் யன்னலை மூடிவிட்டார் என்பது தானே பொருள். பிரம சூத்திரத்தில் உயிர் நாடியான வாக்கு சம்ஸ்கார பராமரிசத்தால் ஞானம் வரும் என்பது தன்னை தூய்மை செய்தல் என்ற கிரியை, செயற்பாடு , முயற்சியில்லாமல், பிற முயற்சிகள் எந்தவித பயனையும் அளிக்க மாட்டாது. பொ. கைலாசபதியவர்கள் கிறிஸ்தவருடைய confession, தன் குற்றத்தை நினைந்து, பச்சாத்தாபப்பட்டு, அதைக்குரவருக்குக் கூறி பிராயச்சித்தம் செய்வது, சம்ஸ்காரபராமரிசத்தின் பாற்படும் ஒரு நல்ல அம்சம் என்று கூறுவார்.

உலகின் உயர்மதங்கள் அனைத்தும் இவ்வாறு தன்னைத்திருத்தி, ஆன்மீக உள்ளொளிபெற்றுப் பூரணவாழ்வு வாழ்வதே பேரின்பம் என்பதை வலியுறுத்துகின்றன. பிதா. தோமஸ் மேர்ட்டன் போன்ற எம் கால அநுபூதி நெறியாளரும் இச் செல்கதியையே வாழ்ந்து காட்டினர். ஆகவே இது எங்கோ நானூறு ஆண்டுகளுக்கு முன் மடத்துக் குறுகிய வட்டத்துள் வாழ்ந்த ஒரு உலகம் தெரியாத பெண்ணின் வழி என்று நினைக்காமல், நாம் கூட சாதித்தால், நம்மை கைதூக்கி விடத்திருவருள் முன் வரும் என்பதை எண்ணுவோமாக. இந்நாளில் அறநெறியையும் மெய்யியலையும் பின்தள்ளிவிட்டு சமயத்தின் புறக்கிரியைகளுக்கு, செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் போக்கு மாறவேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்பது யாரால்? உலகின் உப்பு the salt of the earth யார்? திருச்சபையாகிய கட்டடத்தைத் தாங்கி நிற்கும் அதியுயர் வலிமைமிக்க தூண்கள் எவை? இரும்புக் கம்பி உள்ளே உள்ள குறுகிய கொங்கிறீட்

தூண்களே; அநுபூதியாளர்களே திருச்சபையைக் காலந்தோறும் புதுக்கி, வலுவூட்டி வந்தவர்கள். தூண்களுக்கு மத்தியில் சிறு கொங்கிறீட்கற்களை அடுக்கி மறைப்பை ஏற்படுத்தலாம். அவைமட்டும் கட்டடத்தைத் தாங்க மாட்டா. திரேசாவே கூறுகிறார்: எந்த நிலையில் நின்றாலும் இல்லறமோ, துறவறமோ யாராயிருந்தாலும் இறையருள் என்ற நீரைப்பருகும் தாகம் கொண்டவர்களுக்கு இறைவன் வேறுபாடு காட்டாமல் அருள் வழங்குவார். இது மனதில் பதிந்தால் இன்று இங்கு செலவிட்ட நேரம் வீணாகியது ஆகாது.

## அடிக்குறிப்புகள்

1) உருப்பற்றி, கலையாடி, வருவது உரைத்தல் போன்றவை

2) ஸ்ரீ அரவிந்தர் 6 வயது முதல் 28 வயது வரை இங்கிலாந்தில் படித்து, நாடு திரும்பிய போது, தந்தை இறந்துவிட்டதாக அறிந்து அவருடன் பேசவிரும்பினார். தன்னியக்க எழுத்து (autowriting) முறை மூலம் இறந்த ஆவியுடன் தொடர்பு கொள்ள முயன்றதுண்டு. பிறகு யோகநிலைகளில் உயர்ந்த போது அதனை ஒப்புக்கொள்ளவில்லை (சீடர்கள் வினாவியதிற்கு விடை)

3) Edgar Case (1948) என்ற அமெரிக்க நற்கிறிஸ்த்தவர் ஒரு 'மெஸ் மெரிச' (Mesmorist) நிபுணரின் உதவியுடன், தன்னை இழந்த நிலையில், பற்பல மருத்துவ, உளவியல் வழிகாட்டல்களை இறையருளால் நடத்தினார். பண ஆசையில்லாமல் செய்து, இதனை இறுதிவரை காத்தார். நியுயோர்க் பிஷப் ஒருவர், தம் இறந்த மகனது ஆவியுடன் தொடர்பு கொள்ள முயன்று, ஒரு தகுதியான (Medium) மூலம் அதனை நிறைவேற்றினார். புரட்டஸ்தாந்து கிறிஸ்த்தவ சபையில் இருந்து கொண்டு இதனைச் செய்வது சரி அன்று எனத் தம் பதவியைத்துறந்தார். அவரது நூல் பெரிதும் பேசப்பட்டது. (1980-90 களில்) ஆவியுலகத்தொடர்பு அவைதிகமானது. (Scriptural authority) என்கிறார் பொ. கைலாசபதி

4) அக்காலத்தில் துறவறத்தை மேற்கொள்ளும் தொடக்க கிரியையே அச்சத்தை விளைவிக்கும். நான் ஒரு சினிமாவில் பார்த்தேன்: பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் ஒரு மடத்தில் புதியவரைச் சேர்க்கும் கிரியை. மடத்தின் நுழைவாயிற்கபாடத்தின் முன் உறவினர் நிற்பர். திறந்ததும், துறவு மேற்கொள்ள வந்தவர் கறுப்பு உடை தரித்து, நிலத்தில் படுக்கவைத்து, பிரேதம் போல மூடுவர். அவர் இறந்து விட்டார் எனப் பாவித்து உறவினர் வீடு திரும்புவர். இறந்தவர் எழுவது போல, புது வாழ்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவர். அன்புள்ள இரத்த உறவினருக்கு இது தாங்க முடியாமல் இருக்கும் தானே.

5) பிதா தோமஸ் மோர்ட்டன் தம் சுயசரிதையில் கூறுகிறார்: "பொறாமை, கோபம் போன்ற உட்பகைகள் என்னுள் அதிகம் இல்லை. மிகு போசனம், காமம் ஆகியவை சற்று அதிகமாக இருந்தன. அதனால் அவைகளைப் போக்க, இளமையில் கல்லூரிவாழ்வில் அவற்றை அனுபவித்து பட்டறிவு பெற்று, விலக்க இறைவன் விதித்தார்."

6) நவீன இசைக்கும், தொன்மையான கோவில் இசைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் குறிக்க இவ்வனுபவம் உதவும். ஒரு அவுஸ்த்திரேலியாத்துறவி கரம்பன் புனித செபஸ்ரியார் கோவிலுக்கு அருகிலுள்ள குருமடத்தில் வசித்தார். நத்தார் சமயம் கோவிலிலிருந்து Gregorian Chants என்ற மனத்தை உருக்கும் தொன்மையான பண்ணிசை ஒலிபரப்பப்பட்டது. துறவி அதனை ரசித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அது நின்று, சினிமாவில் வரும் கிறிஸ்தவ பக்திப் பாட்டை ஒலிபரப்பினார்கள். அப்போது துறவியின் உள்ளப்பதைப்பைப் பார்க்க வேண்டுமே! உள்ளத்தை இறைவனிடம் இசையப்பண்ணும் பண்ணிசை வேறு, தாளக்கட்டும், ஒத்திசையும், துள்ளலோசையும் உள்ள நவீன இசை வேறு.

உசாத்துணைநூல்கள்


1) Varieties of Religious Experience – William James (1902)

2) Collected Works of St. Teresa of Avila. Volumes I and II

3) பதினொராம் திருமுறை (1980)

4) மாணிக்கவாசகர் - G. வன்மீகநாதன் Sahitya Academy, Delhi

# காலத்தின் கரைவில் தமிழ் வளர்த்த பெருமகனின் புகழுரைத்த நினைவுப் பேருரைகள்

"உலகிலே பக்தியின் மொழி தமிழ்" என கோடிட்டுக் காட்டி அதன் பெருமைகளை உலகிற்கு உவந்தளித்த உத்தமர் தனிநாயகம் அடிகளாரின் வழியில் "தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்" என்ற இருநோக்கு விருதுவாக்கை தமதாக்கி இயங்கும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின், தனிநாயகம் தமிழ் மன்றம் இந்த எட்டாவது நினைவுப் பேருரையை உவப்புடன் அளிப்பதில் மகிழ்வடைகிறது.

அமுதென்று நோக்கப்படும் இனிய தமிழ் மொழி, இன்றைய நவீன கணினி யுகத்திலும் அதன் பெருமையை இழந்துவிடவில்லை. தமிழை அள்ளிப்பருகியது மாத்திரமன்றி, அதனை மற்றவரும் சுவைக்கவேண்டுமென செயற்பட்ட அப்பெருமகனை எந்தக் காலத்திலும் மறந்துவிட முடியாது. அவர்வழி செயற்பட எண்ணங்கொண்ட இந்த மன்றமும், தமிழின் பெருமைகளை. அதன் புதுமைகளை பேசி பல ஆண்டுகளாக உழைப்பில் ஊன்றி நிற்கின்றது. இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் தமிழ் மொழியை வளர்க்க பாடுபடவேண்டும் என்ற நோக்கில் இம்மன்றம் அவர்களுக்கும் இப்பேருரைகளூடாக அழைப்புவிடுக்கின்றது.

இறைவனை அண்டிச் செல்வதும் அவர் அன்பைச் சுவைப்பதும் ஒவ்வொரு பக்தனுக்கும் இருக்கும் தணியாத தாகமாகும். அந்த தாகத்தை தீர்த்து வைக்கும் சக்தி தமிழ் மொழிக்கு உண்டென்றால் அது மிகையாகாது. குறைகள் களைவதும், பழமைகளில் புதுமைகளைக் காணுவதும், வளர்ச்சிப் படிகளை கடக்க முயல்வதும் எமது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான அம்சங்கள்; இந்த அம்சங்களை அடியொற்றி நடைபெற்ற பேருரைகளை அலசிப்பார்க்கும்போது அவை ஒவ்வொன்றும் காலத்தினை பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகின்றன. தமிழ் இலக்கியம், தமிழ்பண்பாடு, கலாச்சாரப்பாங்கு, என்ற பல்வேறு அம்சங்களை அவைகள் தொட்டுச் சென்றுள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் உண்மையான காலத்தின் கோலமதில் எழுந்த மாபெரும் பேருரைகளே.

**1வது நினைவுப் பேருரை:** *"தனி நாயகமானார்"*
03.07.1993
பேரருட் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை
முன்னாள் யாழ். ஆயர்
அவைத்தலைவர் – அருட் கலாநிதி. அ. எட்வின்
மன்ற இயக்குனர் – அருட் கலாநிதி அ. எட்வின்

**2வது நினைவுப் பேருரை:** *"தமிழ்த்தூது – தத்துவ போதகர் முதல் தனிநாயகம் அடிகள் வரை"*
06.05.1994
பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்
தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனம்
அவைத்தலைவர் – அருட்திரு. லூயிஸ் பொன்னையா அ.ம.தி
மன்ற இயக்குனர் – அருட் கலாநிதி அ. எட்வின்

**3வது நினைவுப் பேருரை:** *"தமிழ்த்தூதின் தனி ஆளுமை"*
12.05.1995
அருட் கலாநிதி. நீ. மரியசேவியர்
அவைத்தலைவர் – அருட் கலாநிதி. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன்
மன்ற இயக்குனர் – அருட்திரு. சூ. ஜெயபாலன் குரூஸ்

**4வது நினைவுப் பேருரை:** *"சங்க இலக்கிய ஆய்வும் தனிநாயக அடிகளாரும்"*
24.05.1998
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
அவைத்தலைவர் – திரு. ஏ. எஸ். அகஸ்ரின்
மன்ற இயக்குனர் – அருட்திரு. யோ. போல் றொகான்

*5வது நினைவுப் பேருரை:* *"வடஇலங்கையில் அரங்கவியலும் கத்தோலிக்கர்களது பங்களிப்பும்"*
08.03.1999
கலாநிதி. காரை செ. சுந்தரம்பிள்ளை
அவைத்தலைவர் – அருட்திரு. ஞா வி. பிலேந்திரன்
மன்ற இயக்குனர் – அருட்திரு. யோ. போல் றொகான்

*6வது நினைவுப் பேருரை:* *"கிறிஸ்தவ தமிழ்நாவல் இலக்கியத்தில் பெண்களின் நிலை"*
22.03.2001
கலாநிதி. (செல்வி) செல்வபூரணம் விமலாதேவி செல்லையா
அவைத்தலைவர் – சு. செல்லத்துரை
மன்ற இயக்குனர் – அருட்திரு. சா. யோ. கு. ஜெயறஞ்சன்

*7வது நினைவுப் பேருரை:* *"தமிழ்த்திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்"*
08.05.2003
எழுத்தாளர், விமர்சகர் திரு. அ. யேசுராசா
அவைத்தலைவர் - திரு. வே. யூ. கொன்சன்ரைன்
மன்ற இயக்குனர் – அருட்திரு. யோ. போல் றொகான்

*8வது நினைவுப் பேருரை:* *'இஸ்பானிய – தமிழ் அனுபூதி நெறிப் போக்குகள்: புனித அவிலா திரேசம்மாள் – காரைக்கால் அம்மையார் ஒப்பீடு'*
06. 06. 2006
எழுத்தாளர், விமர்சகர் திரு. ஆ. சபாரத்தினம்
அவைத்தலைவர் - அருட்திரு. R. J. E. ஜெயசீலன்
மன்ற இயக்குனர் – அருட்திரு. யோ. போல் றொகான்

இத்தனை சிறப்பான உரைகளை அளித்த ஒவ்வொருவரையும் நாம் நன்றிப்பூக்கள் அளித்து அன்போடு நினைக்கின்றோம். இப்பேருரைகளை ஒழுங்குசெய்த அனைவருக்கும் எமது நன்றியை பெருமகிழ்வோடு கூறுகின்றோம்.

வாழுகின்ற எங்களுக்கு வாழ்ந்தவர்களெல்லாம் பாடங்களே; இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு உழைத்த, உழைக்கின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இனி வரும் காலங்களிலும் இந்நிகழ்வு போல பல நடந்திடவும், இதனால் பயன்பெற்று தமிழ் வளர்த்து மறைவளர்க்க அனைவரின் அர்ப்பணிப்பையும், ஆதரவையும், அறிவுரைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

தே. ஜெ. கரன்ஸ், அ.ம.தி
செயலாளர்

# தமிழ்த்தூது தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகளார்

## முன்னுரை

தவத்திரு தனிநாயகம் அடிகளார் உலகப் புகழ்பெற்ற தமிழ்ப் பேரறிஞர். உலக அரங்கில் தமிழுக்கு இடம் பெற்றுத்தந்த ஒப்பற்ற தமிழ் தொண்டர். இருபதாம் நூற்றாண்டில் இவரைப்போல உலகளாவிய அளவில் தமிழ்ப்பணி புரிந்தவர் வேறெவரும் இல்லை. "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்னும் பாரதியாரின் கனவினை நனவாக்கச் செயலாற்றி வெற்றிகண்ட தமிழறிஞர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்ற முன்னின்ற சான்றோர் இவர்.

## வாழ்க்கை

தனிநாயக அடிகளார் நெடுந்தீவைச் சோர்ந்த ஹென்றி ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை, செசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் முதல் மகவாக 02.08.1913 இலங்கையின் வட புலத்தேயுள்ள தீவுப்பகுதியில் உள்ள கரம் பொன் என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் "சேவியர்" என்பதாகும். தம் தந்தையின் பெயரையும் இணைத்து சேவியர் ஸ்தனிஸ்லாஸ் என்பதே அவரது பெயராக வழங்கி வந்தது.

இவர் தனது ஆரம்பக்கல்வியை தனது ஊரிலே கற்றார். பின்பு 1923ம் ஆண்டு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்தார். இவர் தமது இளமைக் காலத்திலே தமிழில் பெரும் ஆர்வம் காட்டவில்லை. உலகப் பொது மொழியாகிய ஆங்கில மொழியில் செம்மையாக எழுதவும், பேசவும் ஆற்றல் பெறவேண்டுமென விரும்பினார். 1923-1930 வரை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற காலத்தில் ஆங்கிலத்தில் சிறந்த புலமை பெற்றார்.

அடிகளாரின் பெற்றோர், சேவியர் ஸ்தனிஸ்லாஸ் கத்தோலிக்க சமயப்பணியில் ஈடுபட ஒரு குருவாக வர வேண்டும் என விரும்பினர். தமது முதற்குழந்தை ஆணாகப் பிறந்தால் அவனை சமயப்பணிக்கு அர்ப்பணிக்க வேண்டுமென அவர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்திருந்தனர். சேவியர் பள்ளிப்படிப்பில் சிறந்து விளங்கியதைப் பார்த்தோர் "இவன் பெற்றோர் என்ன தவஞ் செய்தனரோ" என வியந்து பாராட்டினர். சேவியர் சமயப் பணியில் ஈடுபட குருவாக வர மறுத்து விட்டார். இவரின் அன்னை மரணப்படுக்கையில் அவரை எவ்வளவோ நயந்து வேண்டியும் 'முடியாது' என்றுதான் பதிலளித்தார். பின்னர் அவரின் மனம்மாறியது. இவர் தனது 15ம் வயதில் லியோடால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' (Resurrection) என்னும் நூலைப்படித்தார். இதன் விளைவாக தான் சமயச் சேவையிலும், கல்விச் சேவையிலும் ஈடுபட வேண்டும் என முடிவு செய்தார். இதை அறிந்த அவரது தந்தை மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

எனவே பத்திரிசியார் கல்லூரிப் படிப்பின் பின்னர் கொழும்பில் உள்ள புனித பேனாட் குருத்துவக் கல்லூரியில் (1931-1934) மெய்யியல் படிக்கச்சென்றார். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தம் எழுத்துத் திறமையையும், ஆங்கிலப் புலமையையும் வளர்த்து வந்தார். ஆனால் இடைநடுவில் 1933ம் ஆண்டு யாழ்ப்பாண ஆயராக இருந்த கியோமர் அவர்கள் சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் குருமடத்தில் இருந்து விலகுமாறு பணித்தார். ஏறக்குறைய இதே காலப்பகுதியில் கத்தோலிக்க திருச்சபையில் இணைந்தவரும் கேரளத்தில் உள்ள திருவனந்தபுர சீரோ - மலங்கார சபையின் ஆயருமான ஆயர் ஜவானியோஸ் அவர்கள் தன் மறைமாவட்டத்திற்கு குருமாணவர்களை சேர்ப்பதற்காக கொழும்பு வந்திருந்தார். இவருடைய மறைமாவட்டத்தில் சேர விரும்புகிறவர்கள் மலையாள மொழியையும் சீரோ மலங்கார வழிபாட்டில் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் முறையையும் கற்க வேண்டியிருந்தது. பத்திரிசியார்

கல்லூரியில் நன்கு அறிமுகமானவரான சேவியரை, அருட்தந்தையர்கள் சாள்ஸ் மத்தியூஸ் O.M.I, T. M. F. லோங் O.M.I ஆகியோரின் பரிந்துரையின் பேரில் ஆயர் ஜவானியோஸ் அவர்கள் தன் மறைமாவட்டத்தில் குருத்துவப்பணி செய்வதற்கென ஏற்றுக் கொண்டார். எனவே இந்தியாவில் உள்ள கேரள மாநிலத்தில் திருவனந்த புரத்தில் உள்ள மறைமாவட்டத்தில் சேர்ந்தார்.

சேவியரின் அறிவாற்றலைக்கண்ட இம்மாவட்ட ஆயர் இவரை சமயவியல் கல்வி பயில்வதற்காக உரோமையில் உள்ள "ஊர்பன்" (Urban) பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினார். இவர் ஏற்கனவே ஆங்கிலத்திலும், இலத்தீனிலும் புலமை பெற்றிருந்தவர். உரோமை பல்கலைக்கழகத்தில் ஸ்பானியம், போர்த்துக்கேயம், பிரஞ்சு, ஜேர்மன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளை பயின்றார். ஊர்பன் குருமடத்தில் 43 நாடுகளைச் சேர்ந்த 250 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தனர். அங்கு ஐந்து ஆண்டுகள் வாழ்ந்ததின் பயனாக தனிநாயக அடிகளார் பரந்த உலக மனப்பான்மை படைத்தவராயினார். பற்பல நாடுகளைப் பற்றியும், அவர்களின் இலக்கியங்களைப் பற்றியும் அறியும் வாய்ப்பைப் பெற்றார். உரோமை ஊர்பன் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த தமிழ் மாணவர்கள் 'வீரமாமுனிவர் தமிழச்சங்கம்' என்ற அமைப்பினை நிறுவி சிறப்பாக நடாத்தி வந்தனர். அடிகளார் முதலில் இந்த சங்க நிகழ்ச்சிகளில் விருப்பின்றியே கலந்து கொண்டார். பின்னர் தமிழ் ஆர்வம் அவரில் அரும்பியது. தமிழ்பற்று அவரது உள்ளத்தில் தோன்றத் தொடங்கியது. தமிழின் சிறந்த தன்மையை உணர்ந்ததினால் அவரது தமிழ்ப் பற்று மேலோங்கியது. தமிழில் உரோமையிலிருந்து வானொலி வழியாக நற்செய்தி அருளுரைகளை ஆற்றும் வாய்ப்பைப் பெற்றார். அடிகளாரின் மனத்தையும் அறிவையும் பக்குவப்படுத்தி வளர்த்த உரோமை வாழ்வு அவரது ஆளுமையையும் மிகச் சிறப்பானதாக மாற்றியது. அடிகளார் இயல்பிலேயே பழகுவதற்கு இனியவர். அறிவால் சிறப்புமிக்கவர். கடுமையாக உழைப்பதற்கு அஞ்சாதவர். பெரியோர்களுடன் தொடர்பும் உறவும் கொள்ளுவதில் வல்லவர்.

19 பங்குனி 1938 அன்று சேவியர் ஸ்தனிஸ்லோஸ் அவர்கள் கத்தோலிக்கச் சமய குருவாக அடிகளார் உரோமையில் திருநிலைப் படுத்தப்பட்டார். அவர் தனது முதல் திருப்பலியை புனித செசிலியாவின் அடிநிலைக் கல்லறைச் சிற்றாலயத்தில் நிறைவேற்றினார்.

தம் வாழ்நாளில் ஒரு குருவாகவும், தமிழ்த்தூதாகவும், பேராசிரியராகவும் பல்வேறுவிதமாக சேவைகளை ஆற்றி அனைவரையும் மலைப்பில் ஆழ்த்தினார். 1970 இல் பாரிசிலுள்ள பிரான்சு பல்கலைக் கல்லூரியிலும், 1971 இல் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பேராசியரியராகப்பணிபுரிந்தார். தமது இளைப்பாற்றிக்காலத்தில் அன்றைய யாழ்ப்பாண ஆயரும், தமிழ்த்தூதின் பால்ய நண்பனுமான பேருட்திரு வ. தியோகுப்பிள்ளையின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்தில் வாழத் தொடங்கினார். உடல் நலம் குன்றியவராய் யாழ்ப்பாணத்தில், வளலாய், பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் வாழ்ந்தார். இங்கும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு பல பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். 1980 வைகாசி மாதத்தில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் அடிகளார் கலந்து கொண்டு கா. பொ. இரத்தினம் எழுதிய நூலை வெளியிட்டு வைத்தார். அதுவே அவர் கலந்து கொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி. 01 புரட்டாதி 1980 மாலையில் தமிழ்த்தூது எம்மை விட்டு நீங்காப் புகழ் அடைந்தார்.

**பணிவாழ்க்கை**

19 பங்குனி 1938 அன்று சேவியர் ஸ்தனிஸ்லோஸ் அவர்கள் குருவாக உரோமையில் திருநிலைப் படுத்தப்பட்டார். அடிகளார் தமது பணியின் ஆரம்பம் தொட்டே தொன்மைத்துறையில் சிறந்த ஆர்வம் காட்டினார். உரோமையில் அடிகளார் இருந்த

காலத்திலேயே இந்நகரின் தொன்மைச் சிறப்புக்களையும் கற்றறிந்தார். இதன் மூலமாக வரலாற்றுத்துறையில் பாண்டித்தியம் பெற்றார்.

1939 ஆம் ஆண்டு குருவாக தென் இந்தியா வந்து திருவனந்த புரத்தில் பணியாற்றத் தொடங்கினார். அருள்திரு சேவியர் ஸ்தனிஸ்லோஸ் அடிகளார் உரோம் நகரில் இருந்த 5 வருட காலப்பகுதியில் மலையாள மொழியையோ, சீரோ மலங்கார சபையின் வழிபாட்டு முறையையோ கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. திருவனந்தபுர மறைமாவட்டத்தில் இருந்து மறையறிவிப்புக் கல்லூரிக்கு வந்திருந்த மலையாள மாணவர்கள் அவரோடு அதிக நட்புடன் பழகவில்லை. அவரை இவர்கள் அந்நியன் போலவே நடத்தினார்கள். எனவேதான் 1939ஆம் ஆண்டு குருவாக தென் இந்தியாவில் திருவனந்தபுரத்தில் பணியாற்றத்தொடங்கிய பொழுது அவர் அப்பணியில் நிறைவு கொள்ளவில்லை. காரணம் அங்கு தன்னை ஒரு அந்நியராகவே உணர்ந்தார். எனவே இப்பணியில் அவரால் மனநிறைவு கொள்ள முடியவில்லை. அங்கு இயங்கிய சீரியன் திருச்சபையின் மரபு ஆசாரங்களையும் கவனித்தார். இதுவும் அவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை. அதனால் 1940ல் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் சேர்ந்தார். அங்கு மனமகிழ்ச்சியுடன் பணியாற்றினர். ஆயினும் அங்கு பணியாற்றி வந்த ரோச் என்னும் ஆயரின் ஆணைக்கேற்ப, அடிகளார் நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் பள்ளியில் துணைத்தலைமை ஆசிரியராக 1940-1945 ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தார். இங்கிருந்த ஆயர் தமிழறிவு மிக்கவராகையால் சேவியர் அடிகளாரும் ஆர்வத்தோடு தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டார். தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்தார். தான் சுத்த தமிழ்ப் பெயர் சூட்ட வேண்டுமென அங்கிருந்த ஆயரும் மற்ற திருப்பணியாளர்களும் விரும்பியதால் நெல்லை மாவட்டத்திலிருந்து நெடுந்தீவில் குடியேறிய தனிநாயக முதலி மரபில் தாம் தோன்றியவர் என்பதை அறிந்து தன் பெயரை சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம் என்று மாற்றிக் கொண்டார். அடிகளாரின் ஆளுமை மாணவர்களை பெரிதும் கவர்ந்தது. வகுப்பில் கண்டிப்பு, விளையாட்டு நேரத்தில் மாணவர்களுடன் தானும் சேர்ந்து விளையாடி மகிழ்ந்து மாணவர்களின் மனதில் நீங்கா ஒளிச்சுடராக சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தார். அவர்களுக்கு ஆங்கிலமும், வரலாறும் படிப்பித்தார். இவ்வேளையில் தான் தன் பாடசாலை நாட்களில் கற்காத தமிழ் மொழியையும், இலக்கணத்தையும் கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். ஆகவே ஒரு தமிழ்ப் பண்டிதரிடம் தனியாகச் சென்று தமிழ் மொழியையும், இலக்கியங்களையும் கற்றார். இக்காலப்பகுதியில் தான் இவருடைய தந்தையார் இறைவனடி சேர்ந்தார். எனவே தன் ஒரேயொரு இளைய சகோதரியை யாழ்ப்பாணத்தில் உள்ள திருக்குடும்பக் கன்னியர்களின் பராமரிப்பில் ஒப்படைத்தார்.

அடிகளாரின் ஆசிரியப்பணி ஆறாண்டுகள் இங்கு சிறப்பாக நடைபெற்றது தமிழ்மொழி, இலக்கியங்களைப் படிப்பதில் தந்தை சேவியருக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட ஆயர் ரோச் ஆண்டகை 1945ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழி, இலக்கியத்தில் பட்ட மேற்படிப்பை மேற்கொள்ள இவருக்கு அனுமதி அளித்தார். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக உபவேந்தராகிய பேராசிரியர் எம். இரத்தினசுவாமி அவர்களோடு நட்புக் கொண்டார். தனது தமிழ் அறிவை முறைப்படி வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அங்கே செவ்வனே கற்று 1945ம் ஆண்டில் தனது 32ம் அகவையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக முதுகலைப்பட்டத்தைப் பெற்றார். அடிகளார் நிறுவிய தமிழ் பண்பாட்டு கழகம், உலகத் தமிழ் ஆய்வு மன்றம் ஆகிய மன்றங்களில் இப்பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும் இணைத்துக் கொள்ள இது வாய்ப்பாக அமைந்தது. மேலும் தேவாரம், திருவாசகம் போன்ற சைவ சமய இலக்கியங்களையும் இங்கே நன்கு கற்றிருந்தார். ரிக்வேதத்தை ஆங்கில மொழிப்பெயர்ப்பில் பயின்றார். 1947 ஆம் ஆண்டில் தமிழ் முதுகலைப்பட்டமும் (M.A.) பெற்ற பின்னர் 1949 ம் ஆண்டு எம்.டீ பட்டமும் பெற்றார். இவரின் ஆய்வு வேட்கையை பிறநாட்டு அறிஞரும் பாராட்டினர். இக்காலத்தில் வேறு பல பழந்தமிழ் நூல்களையும் இவர் உருவாக்கிய தமிழ் இலக்கிய கழகத்தின் வழியாக வெளியிட்டார்.

உலகப்பற்றினைத் துறந்த துறவியாகிய தனிநாயகம் அடிகளார் மனித நேயத்தை மறந்ததில்லை. மொழி, இனம், நாட்டுப்பற்று, மனிதப்பற்றும் கொண்டவராகவே வாழ்ந்தார். பணியாற்றினார். பேராயர் சபாபதி குலேந்திரன் கூறுவதைப் போல் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அடிகளாரைப் போல தமிழுக்கு தொண்டாற்றியவர் வேறு எவருமில்லை. அடிகளாரின் வாழ்வில் அவரின் கல்விப் புலமையையும், தனித்துவமான தமிழறிவையும், சங்க இலக்கிய ஆய்வில் அவரின் பங்கையும் மறக்கவே முடியாது.

கல்விப் புலமை

அடிகளார் பிற மொழிகளிலே வல்லவராக இருந்தார். இலத்தீன் மொழி, ஆங்கில மொழி, ஜேர்மனிய மொழி போன்ற பல மொழிகளை தனது மேற்பட்டப்படிப்பிற்காகப் பயின்றார். இவருக்கு 15 மொழிகள் சரளமாகத்தெரியும் என்றும் 30 மொழிகளைப் பயன்படுத்தும் ஆற்றல் உன்டென்றும் பேராயர் சபாபதி குலேந்திரன் குறிப்பிட்டுள்ளார். மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பெற்ற கல்வி ஆய்வு நெறியே அவரைப் புதிய வழிகளுக்கு அழைத்துச் சென்றது. கல்விப்புலமை பெறுவதற்காக அவர் செய்த ஏனைய முயற்சிகள் அவருடைய புலமைக்குத் தனியான ஆழுமை கிடைக்கச்செய்தன.

அடிகளார் தனது கல்விப் புலமையை ஏட்டுக்கல்வியால் மட்டும் பெற்றவர் அல்லர் தனது செயற்பாட்டின் தன்மையை மேலும் வெளிப்படுத்தும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதன் பின்னர், கத்தோலிக்க இலக்கிய வெளியீடுகளை ஊக்குவித்து வளர்ப்பதற்காக "தமிழ் இலக்கியக் கழகம்" ஒன்றை தூத்துக்குடியில் 1947ல் நிறுவினார். பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பற்றிய ஆராய்ச்சியை இவர் தன் இலக்கிய முதுமாணிப்பட்டத்திற்கான ஆய்வுப் பொருளாக கொண்டிருந்தார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இவ்ஆய்வு 1971ல் "பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை: கருத்தும் விளக்கமும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. தூத்துக்குடி ஆயர் ரோச் ஆண்டகை தனிநாயகம் அடிகளாரின் அறிவுப் புலமையைப் பெரிதும் பாராட்டினார். அத்துடன் இந்தியாவிலும் உலகிலும் தமிழ் அறிஞர் மத்தியில் அடிகளார் அவர்கள் வழிகாட்டும் ஒளியாக திகழ வேண்டுமெனவும் ஆயர் விரும்பினார். அதனால்தான் தமிழ்மொழியின் பெருமையை அதன் இலக்கியச் செல்வங்களை அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக தேவை ஏற்படும் போது இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய ஆயர் அடிகளாருக்கு அனுமதி அளித்தார். தமிழ் இலக்கியக் கழக நிறுவனரும், இயக்குனரும் என்ற வகையில் 1950 இல் தனிநாயகம் அடிகளார் தனது முதலாவது சொற்பொழிவுச் சுற்றுப்பயணத்தை வெளிநாடுகளுக்கு மேற்கொண்டார். அங்கு தனது பேச்சாற்றலை நன்கு வெளிப்படுத்தியதுடன் தமிழ் இலக்கியம் பண்பாடு பற்றிய விரிவுரைகளை ஆற்றி தமிழின் சிறப்பைப் பரப்பினார். தென் இந்திய பண்பாட்டு மரபு, தென் இந்திய இலக்கியம், தென் இந்தியாவின் அறியப்படாத இலக்கியங்கள் என்னும் தலைப்புக்களிலே அவர் அங்கு செய்த விரிவுரைகள் பல புதிய செய்திகளை வெளிநாட்டவர்க்குக் கொடுத்தன. அது வரை காலமும் இந்தியா என்றதும் வடமொழி இலக்கியம் பற்றியே அறிந்திருந்த வெளிநாட்டு அறிஞர்களும், ஆய்வாளர்களும் திராவிட மொழிபற்றியும், இலக்கியம் பற்றியும் அறியும் வாய்ப்பைப் பெற்றனர். தமிழ் பற்றிய அறிவில்லாத பிற நாட்டவர்க்குத் தமிழின் சிறப்பை உணர்த்த அடிகளார், பல நாடுகளுக்குச் சென்றார். கணியன் பூங்குன்றனுடைய, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பாடல்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து தாம் செல்லும் நாடுகளிலே எல்லாம் விளக்கினார். "Every country is my country; every man is my kinsman" என ஆங்கிலத்திலும் "todos los pais son mi pais; todos lon homders son mis hermans" எனப் ஸ்பானிய மொழியிலும் அவர் அந்த அடிகளை மொழிபெயர்த்துச் சொல்லும் போது யாவரும் சங்கப்பாடலின் சிறப்பை அறிந்தனர். உலகில் பல்வேறு நாடுகளுக்கும் தமிழ் மொழியின் சிறப்பைப் பரப்பும் தமிழ் தூதுவராகச் சென்றுள்ளார். அவருடைய கல்விப் புலமையாற் தான் உலகமெல்லாம் சென்று தமிழைப்பற்றி எடுத்துரைக்கும் பணியைச் செய்ய முடிந்தது. பிற

மொழியாற்றல் அவருடைய கருத்துக்களை அனைவரும் நன்கு செவிமடுக்கச் செய்தது. அத்துடன் கல்வி சம்பந்தமான உறவு மற்றும் நட்புக்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது. இதன்மூலமே அனைத்துலகத் தமிழாய்ச்சி மன்றத்தின் உருவாக்கமும் (1964) முதலாவது அனைத்துலக மகாநாடும் (1966) சாத்தியமாகியது. அடிகளார் இத்தகைய பணியைச் செய்வதற்கு இயல்பாகவே தமிழ்மீது அவருக்கிருந்த காதல் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. உலகலாவிய நிலையில் தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்ற ஆவலை அவருடைய தனித்துவமான தமிழ் அறிவே ஏற்படுத்திற்று.

உலகில் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தமிழ்மொழியின் சிறப்பைப் பரப்பும் பணியின் ஓர் அங்கமாக 1952 பெப்ரவரியில் தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகத்தின் ஊடாக "தமிழர் பண்பாடு" என்ற ஆங்கில காலாண்டுச் சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தார்.

**அடிகளாரின் தனித்துவமான தமிழ் அறிவு**

தனிநாயக அடிகளாருடை தமிழ் அறிவு தனித்துவமானது. அவர் தன்னுடைய பாடசாலை நாட்களிலே தமிழைக் கற்கும் வாய்ப்பு பெரிதும் அற்றவராக இருந்தார். முன்பு கூறியதைப்போல தூத்துக்குடியிலே ஆசிரியராக இருந்த போதுதான் தமிழைக் கற்க வேண்டும் என நினைத்தார். தமிழ் இலக்கியங்களைக் கற்க வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்தார். தமிழை தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரிடம் முறையாகக் கற்கத் தொடங்கினார். அதன் பின்பே தமிழ் மொழியின் தனித்துவமான சிறப்பை அடிகளார் நன்கு உணர்ந்து கொண்டார். அதனை அவர் பின்வருமாறு கூறுகிறார்: "சைவரும், வைணவரும், புத்தரும், சமணரும், முகமதியரும், கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்தரும் ஒருங்கே இலக்கிய உரிமை பாராட்டக்கூடிய ஒரு மொழி உண்டென்றால் அம்மொழி தமிழ் மொழியேயாம்; அதனால் பெரிய புராணம், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சீறாப்புராணம், தேம்பாவணி, இரட்சணியயாத்திரிகம் போன்ற காப்பியங்களும், பல்வேறு சமயங்களுக்கும் உரிய நூல்கள் வேறு எந்த மொழியின் இலக்கியத்துக்கும் இல்லை என்று துணிந்து கூறலாம்." இவ்வாறு தமிழிலே எழுந்த இலக்கியங்களை அடிகளார் மதிப்பீடு செய்வதற்கு அவருடை தனித்துவமான தமிழ் அறிவே காரணம். காலத்துக்குக் காலம் தமிழிலே தோன்றிய சமய இலக்கியங்களை உலக இலக்கியங்களோடு அவர் ஒப்பிட்டு நோக்கினார். பல்வேறு சமயக்கருத்துக்களைப் பரப்புவதற்கு தமிழ் மொழி ஆற்றலுள்ள ஒரு மொழியாக இருந்ததை அவர் எடுத்துக்காட்டுகிறார். தமிழ் மொழியின் சிறப்பை வளர்க்க "Tamil Culture" என்னும் ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றையும் தொடங்கினார். தமிழின் சிறப்பை எல்லோரும் படித்தறிய இந்த இதழ் பெரிதும் பயன்பட்டது. ஒவ்வொரு நாடுகளிலும் தமிழின் சிறப்பை எடுத்துச்செல்லும் போது அந்தந்த நாட்டு மொழிகளிலே எடுத்துக் கூறிவிளக்கினார். எனவே அடிகளார் தனித்துவ நிலையிலே தமிழின் சிறப்பை பிற மொழிகளால் பரப்ப எண்ணியமை அவருடைய தமிழ்ப்பற்றை காட்டுகிறது எனலாம்.

தன்னுடைய சொற்பொழிவின் போது தமிழ் இந்து சமயத்தின் மொழி மட்டுமல்ல என்றும், அது இஸ்லாமிய, பௌத்த, கிறிஸ்தவ இலக்கியங்களினதும் மொழி என்றும், தமிழ் இலக்கியத்தில் உள்ள பல நூல்களை மனித கண்ணோட்டத்தில் இருந்தே யாரும் கற்றறிய முடியும் என்றும் எடுத்துக் காட்டினார். தனது அமெரிக்க சுற்றுப் பயணத்தின் போது தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கியம், அதன் ஆய்வு என்பவற்றில் ஆர்வம் காட்டிய அறிஞர்கள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தினார். மிகத்திறமையாக ஆங்கிலம் பேசக்கூடியவர் என்பதால் இலகுவாக அனைவரது அபிமானத்தையும் பெற்றுக் கொண்டார்.

**சங்க இலக்கிய ஆய்வும் அடிகளாரும்**

உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்ற ஆவலே அவருடைய தனித்துவமான தமிழ் ஆர்வமாக இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டம் பெறுவதற்காக அடிகளார் சங்க இலக்கிய ஆய்விலே ஈடுபட்டார். "பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இயற்கைக் கோட்பாடும் விளக்கமும்" என்னும் தலைப்பிலே ஆய்வு செய்து பட்டமும் பெற்றார். அவருடைய ஆய்வு பலராலும் விதந்துரைக்கப்பட்டது. இந்த ஆய்வேடு "Nature in Ancient Tamil Poetry" என்னும் நூல் வடிவில் 1952 ஆம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்புகள் "Nature in Tamil Poetry: The Classical Period, Landscape and Poetry - A Study of Nature in Classical Tamil Poetry" என்னும் பிற பெயர்களோடும் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூலை திறனாய்வு செய்த பேராசிரியர் கமில் சுவலபில் பின்வருமாறு கூறியிருக்கின்றார். "பழந்தமிழ் இலக்கியங்களைப்பற்றி இது வரை எழுதப்பட்டவை அனைத்தையும் இந்நூல் பலவகையிலும் விஞ்சிநிற்கின்றது". தமிழ் அறியாத மாந்தர்க்கு தமிழின் சிறப்பை உணர்த்துவதற்காகவே இந் நூலை எழுதியதாக நூலின் முன்னுரையிலே அடிகளார் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து இரு பட்டங்களைப் பெற்ற அடிகளார், தான் சங்க இலக்கியம் பற்றி நீண்ட காலமாக தொடர்ந்து ஆய்வு செய்யவில்லை என்பதையும் குறிப்பிட்டமை அவரது ஆய்வின் நேர்மைக்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அடிகளார், திராவிட இலக்கியம் பற்றி மேலைத்தேய ஆய்வாளர் கவனம் செலுத்தாத காலத்திலேயே அதனை வெளிப்படையாக எடுத்துக் கூற வேண்டும் என எண்ணிச் செயற்பட்டார். மேலும் சங்கப்பாடல்கள் எக்காலத்திற்கும், எந் நாட்டவர்க்கும் இலக்கிய சுவை பயக்கக் கூடியவை எனவே அவற்றை எல்லா நாட்டவர்க்கும் அறிமுகம் செய்யவேண்டும் என்பது அடிகளாரின் கோட்பாடாயிற்று. ஏனைய மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காட்டுகின்ற ஒப்பீட்டு ஆய்வு அடிகளாரின் தனித்துவமான ஆய்வு என்று கூறலாம். கிறிஸ்தவத்தை எல்லா நாட்டு மக்களும் பின்பற்ற வேண்டும் என்பது அடிகளாரின் இறைக்கோட்பாடாக இருந்தது. அது போல சங்க இலக்கியத்தை உலக மக்கள் அனைவரும் படிக்க வேண்டும் என்பது அடிகளாரின் இலக்கியக் கோட்பாடாக அமைந்திருந்தது.

முடிவு

எனவே தமிழ் மேல் கொண்ட அணையாத் தாகம் இவரை சிறந்த தமிழ் அறிஞர் என்ற நிலைக்கு உயர்த்தியது. எந்த வேளையிலும் இவர் தனக்கு கடவுளின் இரக்கத்தாலும் அருளாலும் கிடைத்த தமிழ் அறிவுக்காக நன்றி கூறினார். தமிழ் மொழி, அதன் சிறப்பு உலகெங்கும் பரவுவதற்கு எவ்வாறான சேவைகள் புரிய வேண்டுமோ அவற்றை எல்லாம் மிகவும் உற்சாகமாக, தியாக மனப்பான்மையுடன் செய்தார். எனவே இவர் தமிழுக்கு இறைவன் வழங்கிய பெருங்கொடை. எனவே "தமிழ் வளர்த்து மறைவளர்ப்போம்" என்பதற்கு ஏற்ப தவத்திரு தனிநாயகம் அடிகளார் ஆற்றிய தொண்டையும், அவர் கொண்ட தமிழ் பற்றையும் எமதாக்கி, அதனை வளர்ந்து வரும் புதிய தலைமுறையினருக்கும் கொடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

**ஆக்கம்: அருட்திரு சா. பி. கிருபானந்தம்**

**சகோதரர்கள்: பிரான்சிஸ் அசிசி, றொக்சன் குரூஸ், ஜெகானந்தன்.**

## தமிழ்த்தூது தனிநாயகம் மன்றத்தின் இலட்சினை



எமது இலட்சினை அடியாய் வேதாகமத்தையும், முடியாய் சிலுவைதாங்கும் கரத்தையும் கொண்டு காணப்படுகின்றது. இவற்றுக்கிடையே - விரிந்த தாமரை, விழி, அன்னம், இசைக்கருவி, சுடர்ஒளி என்பன காணப்படுகின்றன. இதன் பின்புலத்தில் நோக்கின் ஒட்டுமொத்த அடையாளங்களும் எமது மண்வாசனை கலந்த ஈழத்து குருத்துவ உருவாக்கத்தின் ஒட்டு மொத்த வெளிப்பாடாகவும், தனிநாயகம் அடிகளின் பார்வை, பதிவு, பயணம் என்பவற்றை அப்படியே உள்வாங்கியதாகவும் காணப்படுகின்றது.

**பரிசுத்த வேதாகமம்:** திருச்சபையின் படிப்பினைக்கு முதல் ஊற்றாகக் காணப்படுகின்றது. இங்கேயும் மொழி வளர்த்து மறை வளர்க்கவும், தமிழ் மொழியூடாக நற்செய்திப் பணியாற்றுவதை சுட்டிக்காட்டுவதால் எல்லா அடையாளங்களையும் தாங்கும் அடித்தளமாகவும் காட்டப்படுகின்றது.

**தாமரை:** தமிழரின் வழிபாட்டிலும். நீர் நிலைகளிலும் காணப்படுவது தாமரை. கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியின் இருப்பிடம். இதனால் அறிவின் ஆசனமாய் கருதப்படுகின்றது. எவ்வாறு சூரியன் வருகையால் தாமரை மலர்கிறதோ, அவ்வாறே இறையருளால் கலையில் செழித்தோங்கி வளர்வதை சுட்டிக்காட்டுகின்றது.

**கண்விழி:** இயேசு கூறுவார்: 'உன் கண்தான் உடலுக்கு விளக்கு'. இங்கேயும் நமது பார்வை, பயணம், பதிவுகள் தூர நோக்குடையவையாகவும், ஆன்மீக அறியாமையை நீக்கவதாகவும் அமைய வேண்டும் என்பதை குறிக்கின்றது.

**அன்னம்:** எவ்வாறு நீரை நீக்கி பாலை அருந்தும் அன்னம்போல் நாமும் தீமையை விலக்கி நன்மையை நாடவும், நன்மை உருவான மானுடத்தை நேசிக்கும் விடயங்களை உள்வாங்கவும் வேண்டும் என காட்டுகின்றது.

**இசைக்கருவி:** இசையால் உருகாத உள்ளம் இல்லை. இறைவனை இசை மீட்டி புகழவும், அவன் கருணை பெறுவதையும் காட்டி நிற்கின்றது.

**சுடர்ஒளி:** கிறிஸ்துவின் சாட்சிகளாய் உயிர்உள்ள ஒளிவிடும் சுடர்களாய், எம்மை காணும் அனைவரும் எம்மில் எரியும் கிறிஸ்துவை காணவேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

**சிலுவை தாங்கும் கரம்:** சிலுவையின் வழி எமக்கு கிறிஸ்து மீட்பைத் தந்தார். நாமும் கிறிஸ்துவின் நற்செய்தியை தாங்கி உலகம் முழுவதும் நற்செய்தியின் சாட்சிகளாய் திகழவேண்டுமென காட்டுகின்றது.

எமது விருதுவாக்கு 'தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்' என்பதாகும். மேற்கூறப்பட்ட இலட்சினையும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களும் இவ்விருது வாக்கிற்கு வலுசேர்க்கின்றன. இதையே எமது மன்ற காவலர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளும் தமக்கு இலட்சியமாக கொண்டு இயங்கினார்.

# ஏட்டாவது நினைவுப் பேருரை

## நிகழ்வில்...

*நினைவுப் பேருரை வழங்குபவர்:* **திரு. ஆ. சபாரத்தினம்**

*அவைத்தலைவர்:* **அருட்திரு. R. J. E. ஜெயசீலன்**

மங்கள் விளக்கேற்றல், இறைவணக்கம், அகவணக்கம்
வரவேற்புரை
அவைத்தலைவர் உரை
நினைவுப் பேருரை
கலந்துரையாடல்
அதிபரின் உரை
நன்றி நவிலல்
மன்றக்கீதம்

## மன்றக்கீதம்

தனிநாயகத் தமிழ் மன்றமே - நின்னைத்
தீந்தமிழ்ப் பண்ணால் வாழ்த்துகின்றோம்

அனுபல்லவி
தமிழ் வளர்ப்போம் - வான்
மறை வளர்ப்போம்
உண்மையின் அறிவினை அடைந்திடுவோம்

1
அன்னைத் தமிழினை அன்பு செய்வோம்
அணிகலன் கொண்டே அழகு நெய்வோம் - 2
பழமையின் மகிமையை மதித்திடுவோம்
புதுமையின் இனிமையிற் களித்திடுவோம் - 2

2
இறையியல் மெய்யியல் படித்திடுவோம்
இலகு தமிழிலிவை படைத்துயர்வோம் - 2
ஞானத்தின் போதமே உணர்ந்திடுவோம்
நாயகன் பாதமே தொடர்ந்திடுவோம் - 2

**வருகை தந்து சிறப்பித்த உங்கள் அனைவருக்கும்**
**எமது மனமார்ந்த நன்றிகள்**

# திரு. ஆ. சபாரத்தினம்
## அவர்களின்
# வாழ்க்கைக் குறிப்புகள் சில...



**பெயர்:** ஆறுமுகம் சபாரத்தினம்

**பிறந்த திகதி:** 30. 10. 1928

**கல்வி:** ஆரம்பக்கல்வி: கரம்பொன் சண்முகநாதா வித்தியாசாலை

க. பொ. த. சா/த வரை: புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை

மஹரகம ஆசிரியப் பயிற்சி (1949 - 1950) **B. A.** பேராதனை பல்கலைக்கழகம் (1964)

~~அதிபர்~~ உ. ஆசிரியர்: புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, (33 வருடங்கள்)

அதிபர்: கரம்பொன் சண்முகநாதா வித்தியாசாலை (4 வருடங்கள்)

**படைப்புக்களும் பங்களிப்புகளும்:** இலக்கியம், வரலாறு, பாட நூல்கள் புதுமுறைச் சரித்திரம், (O/L) 1965-1972

ஆண்டு 6 முதல் **O/L** வரை வரலாற்று நூல்கள், குடியியல் திருத்த பதிப்புக்கள்

சஞ்சிகைகள், கட்டுரைகள் - 1950 முதல் (வீரகேசரி, தினகரன், ஈழநாடு, உதயன், தினக்குரல், திசை, **Saturday Review**

“வீரகேசரி” ஞாயிறு மலர் 1981 - 1983 வரை - விஞ்ஞான பக்க ஆசிரியர்

உப்சலா பல்கலைக்கழகம் - ~~2 வருடம்~~ (1989 1990)

பொ. கைலாசபதி சிந்தனைகள் (இணைப்பதிப்பாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

பொ. கைலாசபதி நூற்றாண்டு விழாக்குழுவின் 3 நூல்கள் வெளியிட்டமை.

லங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் 8 ஆண்டுகள் வடமொழி, ஆங்கில, மருத்துவ வரலாறு விரிவுரையாளர்

நடமாடும் ~~உலகம்~~ பல்கலைக்கழகம், நடமாடும் நூலகம் என கல்வியாளர்களால் பாராட்டப் பெறுபவர்

யாழ். பல்கலைக்கழகத்தினால் சிறப்பு முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்